
# திருக்கோயில்





ஈரோடு மாவட்டம் திண்டல்மலை அருள்மிகு வேலாயுத சாமி திருக்கோயிலுக்கு மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் வருகை புரிந்தார்கள். அறநிலையத் துறை அதிகாரிகள் உடன் உள்ளார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| *தனி இதழ்* | : | ரூ. 5.00 |
| *ஆண்டு உறுப்பினர் கட்டணம்* | : | ரூ. 60.00 |
| *ஆயுள் உறுப்பினர் கட்டணம்* | : | ரூ. 500.00 |

| மாலை 43 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - ஆனி ஜூலை 2001 | மணி 7 |
|---|---|---|---|

### சிறப்பாசிரியர்

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**

*சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்*

### ஆசிரியர்

*முனைவர் த. அமிர்தலிங்கம்,*

எம்.ஏ., பி.எச்.டி.

### ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.**

கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.

### முகப்பு

**திருக்கழுக்குன்றம் அருள்மிகு திரிபுரசுந்தரி**

## பொருளடக்கம்


வானமே மழைபொழிக! - முனைவர் த. அமிர்தலிங்கம்

சேலம் கோட்டை மாரியம்மன் தல வரலாறு - சா. ராமசாமி பி.காம். பிஎல். மற்றும் ச. முருகன்

அருள்மழை பொழியும் அறுமுகச் செவ்வேள் - பாம்பனார் பைந்தமிழ் அரசு ஸ்ரீலஸ்ரீ கருமாரிதாசர்

வைணவத்தில் திருநீறு - டாக்டர் டி. செல்வராஜ்

நாக பயம் நீக்கும் மானஸாதேவி - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கந்தர் அநுபூதி - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

''சன்னதியை மறைக்காதீங்கோ'' - சிறுகதைச் சித்தர் ஏ.வி. ராஜகோபால்

தட்சிணாமூர்த்தி திருவருட்பா — விரிவுரை - பருத்தியூர் டாக்டர் சந்தானராமன்

துக்க நிவாரண அஷ்டகம் - தவத்திரு துர்க்கை சித்தர்

திருநாவுக்கரசர் காட்டும் சிவலோக நெறி - என். சிவராமன்

தாய் துணை வரவேண்டும் - கவிஞர் இராஜேஸ்வரி விசுவநாதன்

இராமாநுஜர் - இந்திரா ஆராஅமுதன்

கன்னனை நான் கண்டுகொண்டேன் - கவிஞர் சொ.பா. சொக்கலிங்கம்

எது சரியான விடை? - அ. நிறைமதி



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***


இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# வானமே மழை பொழிக!

- முனைவர் த. அமிர்தலிங்கம்



வானமே மழைபொழிக - எங்கள்
மாநிலம் துயர்தீர்க
வானமே மழைபொழிக! - எங்கள்
மாநிலம் துயர்தீர்க!(வானமே)

தருணத்தில் வருணன்தான் தூங்குவதோ? - அவன்
தூக்கத்தில் புவித்தாய்தான் ஏங்குவதோ?
தருணத்தில் வருணன்தான் தூங்குவதோ - அவன்
தூக்கத்தில் புவித்தாய்தான் ஏங்குவதோ?

மாரியின்றி நீரின்றி வாழ்க்கை ஏதம்மா?
மாரியின்றி நீரின்றி வாழ்க்கை ஏதம்மா?
மனம் இரங்கிக் காத்தருள்வாய் மாரியம்மா
மனம் இரங்கிக் காத்தருள்வாய் மாரியம்மா (வானமே)

கோயில் குளங்கள் எல்லாம்
உன்பூசை செய்யுதம்மா
கோடிசனங்கள் இங்கு
உன்வரவை வேண்டுதம்மா
கோயில் குளங்கள் எல்லாம்
உன்பூசை செய்யுதம்மா!
கோடிசனங்கள் இங்கு
உன்வரவை வேண்டுதம்மா?
எங்கெங்கும் பார்த்தாலும் மக்களின்
வாட்டம் அம்மா!
உன்வருகை கண்டால்தான்
உயிரிங்கு நிலைக்கும்அம்மா! (வானமே!)

ஆடிவருகுதம்மா
தேடிவந்து பொங்கல் வைப்போம்!
அன்னை உந்தன்
அருள்போற்றிப் பூசைமிகச் செய்திடுவோம்

ஆடிவருகுதம்மா
தேடிவந்து பொங்கல் வைப்போம்
அன்னை உந்தன்
அருள்போற்றிப் பூசைமிகச் செய்திடுவோம்
குற்றங்களைப் பொறுத்துவிடு தாயே! - நல்ல
வான்மழைக்கு ஆணையிடு நீயே!
அழுதழுது ஓய்ந்து விட்டோம் தாயே! - உன்
அருள்மழைக்கு ஆணையிடு நீயே! (வானமே)

(சந்தம் வேறு)

ஆணை நமதென்ற ஞானசம்பந்தர் மீதில்
சொன்னேன் ஆணை
வீழி மிழலையதில் பஞ்சம் தீர்த்த
அப்பர்அடிகள் மீதாணை
தெய்வ நெறிதன்னைக் காக்கவந்த எங்கள்
உத்தமர்கள் மேல் ஆணை!
சத்தியமே இங்கு நித்தியமாம் அந்தத்
தத்துவத்தின்மேல் ஆணை! (வானமே)

* * *

# சேலம் அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் திருத்தல வரலாறு

– தொகுப்பு : சா. ராமசாமி, பி.காம்., பி.எல். & க. முருகன், எம்.ஏ., பி.எட்.,

தமிழ்நாடு திருக்கோயில்கள் நிறைந்த திரு நாடு. வானளாவிய கோபுரங்கள் உலகிற்கே ஒரு புதுமை; தமிழ் நாகரிகத்தின் சின்னங்கள்; வற்றாத கலை ஊற்றுக்கள்; கலையுலகிற்கு தமிழர் அளித்த கலைக் கொடைகள். கோ + இல் = கோயில். கோ - இறை, இல் - தங்கும் இடம் ஆக கோயில் என்பது இறை தங்கும் இடமாகும். கோயிலை ஆலயம் என்றும் அழைப்பர்.

ஆலயம் என்பதை ஆ + லயம் என்று பிரிக்கலாம். 'ஆ' என்பதற்கு ஆன்மா என்று பொருள். 'லயம்' என்பதற்கு லயமாவதற்கு அல்லது சேருவதற்கு உரிய இடம் எனப் பொருளாகும். இப்பொருள்படி கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்குரிய இடம் எனப் பொருள் கொள்ளலாம். 'ஆ'என்பது ஆணவ மலத்தையும் 'லயம்' என்பது அடங்கி இருத்தலையும் குறிக்கும். அதனால் ஆலயம் ஆணவ மலம் அடங்கு வதற்குரிய இடமாகும்.

நிலத்தடியில் நீர் எங்கும் நிறைந்திருந்தாலும் ஒரு கிணறு வெட்டி அதன் மூலமே நீரைப் பெற முடியும். பசுவின் உடம்பெல்லாம் பால் வியாபித் திருந்தாலும், அது அகடுகளின் வழியேதான் நமக்கு கிடைக்கிறது. இவைபோல் இறை எங்கும் நிறைந் திருந்தாலும் திருக்கோயில்களில் உள்ள மூர்த்தி களின் வழியாகவே பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறது.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அன்னை இப்பூவுலகில் உள்ள எல்லா உயிர்களுக் கும் இடர் நீக்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் திருக்கோயில்களில் எழுந்தருளி தன் மீது நம்பிக்கை வைத்து அன்பினால் வழிபடும் அடியார்களுக்கு அருள்மழை பொழிகின்றாள். காஞ்சியிலே காமாட்சி என்னும் திருநாமத்தோடு அருள்பாலிக்கும் அன்னை, காசியிலே விசாலாட்சி என்னும் பெயரில் மக்களை காத்து வரும் அன்னை, மதுரையிலே மீனாட்சி என் னும் பெயரோடு விளங்கும் அன்னை, ஆரூரிலே கமலாம்பிகை என்னும் பெயரில் அருளாட்சி செய்யும் அன்னை, நாகையிலே நீலாயதாட்சி என்னும் பெயரில் நாடெல்லாம் நயம் பயக்கும் அன்னை, சேலத்திலே பெரிய மாரியம்மன் என்ற பெயரோடு எழுந்தருளி வேண்டுவோர் வேண்டும் வரங்களையெல்லாம் வழங்கி வருகிறாள்.

நீலத்திரைகடல் ஓரத்தில் நித்தம் தவம் செய்யும் குமரியன்னைபோல், தொண்டை நாட்டு பாலாற்றங் கரையில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் சுரக்கும் தேவி கருமாரிபோல், கங்கையாற்றங்கரையில் வீற் றிருக்கும் விசாலாட்சிபோல், வைகையாற்றங்கரை யின் மாணுபோடு விளங்கும் மீனாட்சியம்மன் போல், சேர நாட்டில் சேலம் மாநகரில் அமைந்த மணிமுத்தாற்றங்கரையில் எழுந்தருளி இருப்பவள் தான் கோட்டை பெரியமாரியம்மன் ஆவாள்.


## அமைவிடம்

பண்டைய தமிழகம் பல்வேறு மண்டலங் களாகப் பிரித்து ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. அவ்வாறு அமைந்த மண்டலங்களுள் கொங்கு மண் டலமும் ஒன்று. தற்போது உள்ள சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, கோவை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதே கொங்கு நாடு, கொங்கு நாடு மலை வளமும், மன வளமும் நிறைந்த நாடு. புலவரும், புரவலரும் சிறந்த நாடு. தமிழ் மணம் கமழ விளங்கிய நாடு. இதன் கீழை திசையில் புகழ் நிறைந்த பகுதியே ''சேலம் மாநகரம்'' ஆகும்.

சேலம் மாநகரத்தின் மத்தியில், சேலம் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகிலும், சேலம் தொடர் வண்டி சந்திப்பில் இருந்து 6 கி.மீ. தூரத்திலும் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் அமைந்து இருக் கின்றது. கோட்டைப் பகுதியின் ஈசான திசையில் (வடகிழக்கு திசை) காவல் தெய்வமாக நின்று மக் களைக் காத்து வருகிறாள் அன்னை மாரி.

## பெயர்க்காரணம்

சைலம் என்றால் மலை என்று பொருள். சேலத்தைச் சுற்றிலும் மலைகள் சூழ்ந்திருக்கின்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. சைலம் - சீலம் -



சேலம் என்றாகியது என்பர். சேலம் ஒரு காலத்தில் சேர நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. அதனால் சேரலம் என்பது பின் சேலம் என மாறியது என்றும் ஆய்வாளர் கூறுவர்.

தற்போது இவ்வூர் மாங்கனி புகழ்பெற்றது. அதனால் 'மாங்கனி மாநகர்' என்ற சிறப்பு பெயரும் உண்டு.

## அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன்

சேலம் மாவட்டத்தில், மாங்கனி நகராம் சேலம் மாநகரில் பிரசித்திப்பெற்ற பிரார்த்தனை ஸ்தலமாக அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில் விளங்குகிறது. சேலத்தில் அமைந்துள்ள

1. கோட்டை மாரியம்மன்
2. அம்மாப்பேட்டை மாரியம்மன்
3. செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன்
4. சஞ்சீவிராயன்பேட்டை மாரியம்மன்
5. சின்னக்கடைவீதி சின்ன மாரியம்மன்
6. குகை மாரியம்மன்
7. அன்னதானப்பட்டி மாரியம்மன்
8. பொன்னம்மாப்பேட்டை மாரியம்மன்

ஆகிய எட்டு மாரியம்மன்களில் கோட்டை மாரியம்மன் தான் பெரியவள், சக்தி வாய்ந்தவள். இதனாலேயே கோட்டை பெரியமாரியம்மன் என்று பக்தர்களால் அழைக்கப்படுகின்றது. சேலத்தில் உள்ள எட்டு மாரியம்மன்களுக்கும் தலைமையாக விளங்குவதால், ''எட்டுப்பேட்டைகளைக் கட்டியாளும் அன்னை கோட்டை மாரி'' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

சேலத்தில் உள்ள எட்டு மாரியம்மன்களுக்கும் தலைமையானவள் என்பதற்கு மற்றொரு சான்றையும் சொல்லலாம். இப்பொழுது சிறப்பாக நடைபெற்று வரும் ஆடிப்பெருந்திருவிழா ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் சேலம் மாநகரத்தில் நடைபெறும் மிகப்பெரிய விழாவாகும். இவ்விழாவின் போது பூச்சாட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த பூச்சாட்டுதலின்போது சேலத்தில் உள்ள ஏனைய ஏழு மாரியம்மன் திருக்கோயில்களுக்கும் இங்கிருந்துதான் பூ எடுத்துச்சென்று அந்தந்த மாரியம்மன் திருக்கோயில்களில் பூச்சூட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது தொன்றுதொட்டு வரும் நிகழ்ச்சியாகும். எனவே, இந்த வகையிலும் பெரிய மாரியம்மன் என்று அழைப்பது பொருத்தமாகும்.

## திருக்கோயில் வரலாறு

சேலம் கோட்டை மாரியம்மன் திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு சேரநாட்டைச் சேர்ந்த சிற்றரசர்கள் ஆண்ட காலத்தில் இப்போது கோட்டை என்று சொல்லும் இடத்தில் ஒரு கோட்டை அமைத்து ஆட்சி செய்தபோது இந்த மாரியம்மன் கோயிலையும், ஒரு பெருமாள் கோயிலையும் அமைத்தார்கள். இந்த அம்மன் கோயிலை கோட்டை வீரர்கள் எல்லாம் ஒரு காவல் தெய்வமாக வணங்கி வழிபட்டு வந்தார்கள். கோட்டையில் இருந்த வீரர்களுக்கு மாரி காவல் தெய்வமாக இருந்திருக்கிறாள். ஆனால், இன்று அந்த கோட்டை இல்லை. கோட்டை இருந்ததற்கு அடையாளமாக கோட்டை மேடு என்ற பகுதி மட்டுமே இன்று உள்ளது.

இக்கோட்டையில் அமைந்த இக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. கோட்டைக்குக் காவல் தெய்வமாக இருந்ததால் ''கோட்டை பிறக்கையிலே கூடப் பிறந்த பெரிய மாரி, சேலம் பிறக்கையிலே சேர்ந்து பிறந்த பெரிய மாரி'' என்ற சின்னப்பக்கவுண்டரின் பாடல்கள் மூலம் தெரிய வருகிறது.

இந்தக் கோட்டைக்குள் இருந்த அம்மனை திருமணி முத்தாற்றின் அருகில் சேலம் கணக்கர் தெருவில் இருக்கும் திரு கனகசபை முதலியார், திரு சிவசங்கர முதலியார் ஆகியோர் இப்போதிருக்கும் இடத்திற்கு இடம் மாற்றம் செய்து கோயில் அமைத்து கும்பாபிசேகம் செய்தார்கள். அப்போது

திருமணிமுத்தாற்றிலிருந்து அம்மன் அபிசேகத்திற்கு தண்ணீர் எடுத்து வந்து அபிசேகம் செய்தனர்.

கோட்டை மாரியம்மனை தரிசிக்க சுற்றிலும் இருக்கிற ஊர்களிலிருந்து பக்தர்கள் வந்து வழிபாடு செய்தனர். இவர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லை. தங்குவதற்கு இடவசதி இல்லாமல் பக்தர்கள் அல்லல் படுவதை அறிந்த சேலம் திரு முத்துகுமார பிள்ளையும், பட்டாக்காரர் பார்வதி அம்மாளும் இவர்களின் மகன் மதுரைபிள்ளை ஆகியோர் தங்கள் சொந்த செலவில் இலவசமாக தங்குவதற்கு என்று 1876 தாது வருடம் சித்திரை மாதம் ஒரு தர்ம சத்திரத்தைக் கட்டி கொடுத்தார்கள். இந்த தர்ம சத்திரம் தான் கோயிலின் அலுவலகமாக செயல்பட்டு வந்தது.

இக்கட்டிடம் பழுதடைந்து இடியும் நிலையில் அதை இடித்துவிட்டு அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் அனுமதியின் பேரில் ரூபாய் பன்னிரண்டு இலட்சத்தில் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்குப் பொங்கு மண்டபம் மற்றும் தங்கும் மண்டபம் ரூபாய் 1 1/2 இலட்சம் மதிப்பில் ''ஸ்ரீ கோட்டை பெரிய மாரியம்மன் அறக்கட்டளை'' சார்பில் நன்கொடையாக கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.

1881-ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ் விசு ஆண்டு கார்த்திகை திங்கள் சேலத்தைச் சேர்ந்த தாயம்மாள் என்பவரின் மகள் நாகம்மாள் என்பவர் கோயில் வடபுறம் அமைந்துள்ள தளம் அமைத்தும், கட்டிடத்தைப் புதுப்பித்தும் கொடுத்துள்ளார்கள். இவ்வாறாக திருக்கோயில் திருப்பணிகள் செய்யப்பட்டு, சேலம் நகர மக்களிடையேயும், சுற்றுப்புற கிராம மக்களிடையேயும் பிரபலமடைந்து வருகிறது.

1982 - 1989-ம் ஆண்டிலும் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு 81 அடி உயர இராசகோபுரம் கட்டி முடிக்கப்பட்டு, 01.07.1993ந் தேதியன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது.

## திருக்கோயில் அமைப்பு (மூர்த்தங்கள்)

காவல் தெய்வமாக நின்று உலகை காத்து அருளும் அன்னை கோட்டை பெரிய மாரியம்மன் எழுந்தருளி இருக்கும் திருக்கோயில் கருவறை, முன் மண்டபம், பலி பீடம், வெளிப்பிரகார மண்டபம், கிளி மண்டபம், வசந்த மண்டபம் முதலியவற்றுடன் பிரம்மாண்ட முறையில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட இராசகோபுரம் ஒன்றையும் பெற்று சீரும் சிறப்புமாக விளங்குகிறது. இத்திருக்கோயில் அமைப்பு முறையையும், ஆங்காங்கே எழுந்தருளி உள்ள மூர்த்தங்களையும் காணலாம்.

## கருவறை

இத் திருக்கோயிலின் கருவறை சிறியதாகவும் மிக அழகிய முறையிலும் அமைந்துள்ளது. 4 மீட்டர் நீளம், 6 மீட்டர் அகலத்தில் உட்பிரகாரம் அமைந்துள்ளது. உட்பிரகார வாயிலில் (கருவறை வாயில்) இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாய் இரண்டு துவார பாலகிகளின் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

## அன்னையின் திருக்கோலம்

அன்னையின் சிரசில் ஜுவாலா கிரீடம் அக்னி ஜுவாலையுடன் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. அக்கிரீடத்தில் நாகம்படம் எடுத்துள்ளது போன்ற அமைப்பு உள்ளது. நான்கு கரங்களுடன் அன்னை விளங்குகிறாள். வலது மேற் கரத்தில் நாகபாசமும், உடுக்கையும் ஏந்தி இருக்கிறாள். வலது கீழ்க்கரத்தில் திரிசூலம் விளங்குகிறது. இடது மேற்கரத்தில் அங்குசமும் அமுத சின்னமும் ஏந்தியவளாய் வீற்றிருக்கிறாள். இடது கீழ்கரத்தில் கபாலம் காணப்படுகிறது. அன்னை வலது காலைத் தொங்கவிட்டுக் கொண்டு, இடது காலை மேல் யோகாசனமாக மடித்து வைத்துக்கொண்டு ஈசான திசை நோக்கி அமைதி வடிவமாய், ஆனந்தம் பொங்கும் முகத்தாளாய் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருளாட்சி செய்து வருகின்றாள்.

## முன் (பலிபீட) மண்டபம்

கருவறைக்கு முன்னே அமைக்கப்பட்டுள்ள மண்டபம் கருங்கல் தூண்களாலும், கருங்கற்களாலும் ஆனது. இம் மண்டபத்தின் நீளம் 9 மீட்டர், அகலம் 6 மீட்டர் ஆகும். உயரம் 2.75 மீட்டர் ஆகும். முன் மண்டபத்தை 30 கல்தூண்கள் தாங்கியுள்ளன. இக்கல் தூண்கள் அழகிய சிற்ப வேலைபாடுகளுடன் அமைந்துள்ளது. ஒவ்வொரு தூணிலும் அதனை நன்கொடையாக அளித்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் மையத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

## வெளிப்பிரகார மண்டபம்

முன் மண்டபத்தை அடுத்து வெளிப்பிரகார மண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தினை வலம் வரும்போது வலதுபுறம் மதுரை வீரன் சுவாமி, வெள்ளையம்மாள், பொம்மியம்மாள் இணையோடு (சமேதராய்) வீற்றிருக்கிறார். இதனருகில் விநாயகர் மற்றும் நாகர் கிழக்கு நோக்கியவாறு பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்கள்.

வெளி மண்டபத்தின் சுவரின் மூன்று பக்கங்களிலும் அழகிய முறையில் தெய்வீகக் காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

### கிளி மண்டபம்

கிளி மண்டபம் முன்மண்டபத்திற்கு அடுத்து அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் நீளம் 2.85 மீட்டர், அகலம் 2 மீட்டர் ஆகும். கிளி மண்டபத்தின் மேல் அழகிய விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அழகிய சுதை சிற்பங்கள் உள்ளன. ஆடிப்பெரு விழாவில் இம்மண்டபத்தில் தான் அம்மன் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும்.

### வசந்த மண்டபம்

கிளி மண்டபத்தை அடுத்து துவஸ்தம்ப மண்டபம் அமைந்துள்ளது. இதில் கருட கம்பம் உள்ளது. கார்த்திகை தீப விழாவின்போது கோடி தீபம் ஏற்றி கூம்பு கொளுத்தப்பட்டு வருகின்றது. இதற்கடுத்து வசந்த மண்டபம் அமைந்துள்ளது. வசந்த மண்டபத்தில் வடக்கு திசையை நோக்கி விநாயகப் பெருமான் அமர்ந்து அருள்பாலித்து வருகின்றார்.

### இராஜகோபுரம்

கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் புதியதாக இராஜகோபுரம் கட்டப்பட்டு 01.07.1993ல் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது. இக்கோபுரம் 42 அடி 8'' நீளமும், 30 அடி அகலமும் 81 அடி உயரமும் கொண்டதாகும். ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜகோபுரம் மிகச் சிறப்பாகவும், அழகிய வேலைப்பாடுகளுடனும் முற்றிலும் கருங்கற்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத் திருக்கோயில்களில் உள்ள பெரிய இராஜகோபுரங்களில் இதுவும் ஒன்றாகும்.

### பெரிய மாரியம்மன் மகிமை

அன்னையின் மகிமை அனைவரும் அறிந்த ஒன்றே. அன்னையின் அடியவர்கள் மாரி (மழை) வேண்டி விழா எடுக்க அன்னையும் மனமுருகி அடியார்களின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து வேண்டுதலை நிறைவேற்றுகிறாள். ஆடி மாதம் முழுவதும் மழை பெய்து 18-ம் நாள் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.

### காக்கும் வல்லவள்

சேலம் மணக்காட்டைச் சேர்ந்த மாணிக்கம் என்பவர் தீராத நெஞ்சுவலியால் அவதிப்பட்டார். பல மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்தும் பலன் இல்லை. பல்வேறு கோயில் குளங்களுக்கும் சென்று வந்தும் பயன் இல்லை. இறுதியாக அருள் மிகு கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு வந்து, ''அன்னையே என்னை காக்க வேணடும், தாயே என்னை காக்கவில்லை என்றால் நீயே என்னை எடுத்துக்கொள்'' என்று கூறியவாறே திருக்கோயில் பலிபீடத்திற்கும் உண்டியலுக்கும் இடையே படுத்துக் கொண்டு, ஒரு கத்தியை எடுத்து தன் குரல்வளையைத் தானே அறுத்துக்கொண்டார். குரல் வளையிலிருந்து ரத்தம் பீறிட்டு வந்ததும் அக்கம் பக்கம் இருந்தவர்கள் மாணிக்கத்தை மருத்துவமனையில் சேர்த்தார்கள். பிழைப்பது அரிது என்று மருத்துவர்களும் கைவிட்டனர். இருப்பினும், அன்னை மீது பாரத்தைப் போட்டு முயற்சி செய்கிறோம் என்று கூறி குரல் வளையத்தை சிகிச்சை செய்தனர். மருத்துவர்களும் வியக்கும் வண்ணம் அறுவை சிகிச்சை செய்த பின்னர் குரல் வளை சரியாகிவிட்டது. அவருடைய நெஞ்சு வலியும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. பிறகு, அவர் கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு வந்து மாலைமாலையாய் கண்ணீர் வடித்து மனமுருகி வணங்கிச் சென்றார்.

### வழக்கு தீர்த்த மாரி

அன்பர் ஒருவர் கோட்டை மாரியம்மனிடம் மிகுந்த பக்தியுடையவர். எந்த காரியத்தையும் கோட்டை மாரியம்மனை நினைத்தே தொடங்குபவர். அவளின்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அத்தகைய அன்பருக்கு ஒரு சோதனைக் காலம். அவருடைய பங்காளி ஒருவர் அவர் மீது வழக்கு தொடுத்தார். செல்வந்தரான பங்காளியை எதிர்த்து ஏழை அடியவர் வழக்காட முடியவில்லை. கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு வந்தார். அருள் சுரக்கும் தாயை வணங்கி, ''அன்னையே நீ தான் என்னை காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு, நீதிமன்றம் சென்றார். வழக்கு அன்பருக்கு ஆதரவாக முடிந்தது.

அன்பர் நீதிமன்றத்திலிருந்து, நேரே கோட்டை மாரியம்மன் கோயிலுக்கு ஓடோடி வந்தார். ஆனந்தக் கண்ணீர் மல்க அன்னையின் சன்னதியில் நின்றார். எவ்வளவு நேரம் நின்றாரோ தெரியாது. பின் அன்னையின் திருப்பாதம் வணங்கி மனநிறைவோடு வீடு திரும்பினார். மாரி தன்னை நம்பியவர்களுக்கு காவல் தெய்வமாக இருந்து காத்து வருகிறாள் என்பது மேற்

கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

### முத்தெடுக்கும் வேப்பிலைக்காரி

முகத்தினில் முத்தையம்மா முன்னதா நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா தூரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரியே
நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரி லிறக்கிவிடும்
பூமியி லிறக்கிவிடு பெற்றவளே காருமம்மா
பெற்றவளே என்தாயே பேரரசி மாரிமுத்தே
உற்றதுணை நீயிருந்து உகந்தரசி காருமம்மா!

என்று மாரியம்மன் தாலாட்டில் குறிப்பிடுவது போல் மக்களுக்கு வரும் கொடிய நோய்களில் ஒன்றான முத்து (அம்மை நோய்) வருமானால் அதைக் காப்ப திலும், முத்தை இறக்குவதிலும் மாரி அன்னை சிறந்து விளங்குகிறாள். முகத்தில், தோளில், கழுத்தில், மார் பில், வயிற்றில், தொடையில், பாதத்தில் எங்கு இருந் தாலும் அம்முத்தை இறக்கி பூமியிலே விடும் ஆற்றல் நிறைந்த வேப்பிலைக்காரி மாரியம்மன்.

இவ்வாறு அன்னையின் திருநீறினாலும் அருள் நீரினாலும் முத்து இறங்கிய பின்னர் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன் செலுத்த கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகிறார்கள். கையில் வேப்பிலை ஏந்தியவர்களாய், ''தாயே, பராசக்தயே! என உடலில் இருந்த முத்தையெல்லாம் நீக்கியவளே! இதோ என் நேர்த்திக்கடன் ஏற்றுக்கொள்'' என்று மனமுருகி வேண்டியவாறே (அங்கப்பிரதட்சனை) திருக்கோயில் பிரகாரத்தை மூன்று முறை வலமாக தரையில் உருண்டுகொண்டே வருவார்கள். இவ்வாறு உருண்டு வருவதற்கு உருளுதண்டம் என்று பெயர். இவ்வாறு பக்தர்களின் முத்து மாரியாக (முத்தையிறக்கும் மாரி யாக) நம் அன்னை விளங்குகிறாள்.

### பூப் போட்டு பார்த்தல்

இத்திருக்கோயிலில் பூப்போட்டு கேட்டல் பிரசித்தமானது. குடும்பத்தில் ஏற்படும் சிக்கல் தீருமா? மகளுக்கு விரைவில் திருமணம் நடைபெறுமா? தந்தைக்கு வந்திருக்கும் நோய் தீருமா? மகனுக்கு வேலை கிடைக்குமா? போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க வெள்ளை, சிவப்பு நிறங்களில் பூக்களைப் பொட்டலங்களாகக் கட்டி அம்மனின் திருவடியில் வைத்து அவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துப் பார்த் தால், நினைத்த பூ வந்தால், தாம் எண்ணி வந்த செயல் விரைவில் நிறைவேறும் என்று நம்பிக்கையோடு செல்வர். இதற்குப் பூப்போட்டு பார்த்தல் என்று பெயர். பக்தர்கள் பூப்போட்டு பார்த்து தம் பிரச்சனை களைத் தீர்த்துச் செல்வதுண்டு. நோயால் பீடித்தவர் களும், துயர் கொண்டவர்களும் பிரச்சனைகளில் சிக்கி தவிப்பவர்களும் இத்திருக்கோயிலுக்கு வந்து அம்மனை தரிசித்து அருள்பெற்று செல்கிறார்கள்.

### வேண்டுதலும், நேர்த்திக்கடனும்

மதம் என்பது நம்பிக்கை, சடங்குகள், ஐதிகங் கள் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டது. அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கை என்கின்றோம். அது ஒன்றின் உண்மையை ஏற்றுக்கொள்வதாகும். நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் சமுதாயத்தின் தேவையின் அடிப்படை யில் தோன்றியவையாகும் என்பர் அறிஞர் பெருமக் கள். பக்தர்கள் கோட்டை பெரிய மாரியம்மனை தங்கள் குறைகளைப் போக்கும் மகாசக்தியாக நம்பி வழிபட்டு வருகிறார்கள். அதனால் தான் தம் மேற் கொள்ளும் முக்கிய செயல்களுக்கு அம்மனின் இசைவு பெற்றே செயல்படுகின்றனர்.

### மண் உரு சாத்துதல்

அம்மை நோய் கண்ட பக்தர்கள் தம் நோய் நீக்கி நலமளித்து காக்குமாறு, கோட்டை பெரிய மாரி யம்மனிடம் வேண்டிக் கொள்வர். அம்மனின் திருக் கோயில் புனித நீர் (தீர்த்தம்) வாங்கிச் சென்று தம் மீதும் தன்னைச் சுற்றியும் தெளித்துக் கொள்வர். உடலை வேப்பிலைக்கொண்டு தடவுவார்கள். அம்ம னின் அருளால் நோய் நீங்கப்பெற்று குணமடைவார் கள். அதற்கு நேர்த்திக் கடனாக பொம்மை உருவங் களைத் தம் தலை மீது வைத்துக்கொண்டு, திருக் கோயிலை மூன்றுமுறை வலம் வந்து பலிபீடத்தின் அருகில் வைப்பார்கள். இதன் பொருள் தமக்கு நலம் அளித்தற்கு, தம்மையே அம்மனுக்கு ஒப்படைப்பு செய்துவிட்டதற்கு ஒப்பாகும்.

### கண்ணடக்கம் சாத்துதல்

கண்ணில் பூ விழுந்தாலோ அல்லது வேறு சில நோய்கள் ஏற்பட்டாலோ கோட்டை பெரிய மாரி யம்மனிடம், தமது கண்ணிற்கு ஏற்பட்ட நோயை நீக்குமாறு வேண்டிக்கொள்வர். அதன் காரணமாக நோய் நீங்கி நலமடைவர். தங்கள் வேண்டுதலுக்கு ஏற்ப மாரியம்மனுக்கு பொன்னாலோ (அ) வெள்ளியாலோ (அ) தகடுகளாலோ கண்ணடக்கம் செய்து அம்மனுக்கு சாத்தி நேர்த்திக் கடனைச் செலுத்துவார்கள். சில நேரங்களில் திருக்கோயிலுக்கு வந்து மொட்டை அடித்து முடிகாணிக்கை செலுத்துவதும் உண்டு.

### உருவாரம் சாத்துதல்

கோட்டை பெரிய மாரியம்மனை வணங்கி வழிபட்டு வரும் பக்தர்கள் தமக்கோ அல்லது தம் உறவினர்களுக்கோ நோய்ஏற்பட்டாலோ நோயை நீக்குமாறு அம்மனிடம் வேண்டிக்கொள்வர். நோய் நீங்கப்பெற்றால், நோயின் காரணமாக எந்த உடற் பகுதி பாதித்ததோ அதேபோன்ற உருவை காணிக்கை அளிப்பதாக நேர்ந்துகொள்வர். அவ்வாறு வேண்டிக் கொள்பவர்கள் அம்மன் அருளால் நோய் நீங்கப் பெற்று நலமடைவார்கள். வேண்டுதலுக்கேற்ப ஆண், பெண் முழு உருவம், மற்ற உறுப்புக்களை போன்ற உருவங்களை அம்மனுக்கு காணிக்கையாக செலுத்துவர்.

### அடியளந்து கொடுத்தல்

பக்தர்கள் செய்கின்ற நேர்த்திக் கடன்களுள் அடியளந்து கொடுத்தல் என்பதும் ஒன்றாகும். இந்த வேண்டுதலை பெண்கள் மட்டுமே செய்கின்றனர். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து மூன்றுமுறை திருக்கோயிலை வலமாக சுற்றி வருதலே அடியளந்து கொடுத்தல் எண்கின்றோம். அதனால் அவர்கள் வேண்டுதல்கள் நிறைவேற்றி அன்னை அருள் பாலிக்கின்றாள்.

### பலிபீடத்தின் மீது உப்பு மிளகு போடுதல்

பக்தர்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறையோ அல்லது நோயோ நீங்கிட வேண்டும் என்று அம்ம னிடம் வேண்டிக்கொள்வர். அப்பொழுது குங்குமம் கலந்த உப்பை பலிபீடத்தின்மீது போட்டு நீர் ஊற்று வார்கள். நீருடன் கலந்து உப்பு எவ்வாறு கரைந்து விடுகிறதோ அதேபோன்று அம்மன் அருளால் நோய் இருந்த இடம் தெரியாமல் நீங்க வேண்டும் என்பதே இந்த வேண்டுதலின் நோக்கமாகும்.

இதே போன்று வியாபாரிகள் தங்களது வியாபாரம் சிறப்பாக நடக்கவும், விவசாயிகள் விளைச்சல் பெருகவும், கால்நடைகள் நோய்நொடி யின்றி இருக்கவும் வேண்டிக்கொள்வர். வேண்டுதல் நிறைவேறப்பெற்றவுடன் அம்மனுக்கு காணிக்கை செலுத்துவர்.

### திருவிழாக்களும், பூசைகளும்

கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, திருக் கார்த்திகை, தைப்பொங்கல், மகாசிவராத்திரி, தமிழ் வருடப்பிறப்பு, ஆடிப்பெருந்திருவிழா ஆகிய விழாக் கள் நடைபெறுகின்றது. அனைத்து விழாக்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் சீரிய சிறப்பான விழாவாக விளங்குவது ஆடிப்பெருந்திருவிழா ஆகும். இத் திருவிழாவில் நாள்தோறும் மாலையில் சமயச் சொற் பொழிவுகளும், பட்டிமன்றமும், பல்வேறு இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### ஆடிப்பெருந்திருவிழாவின் நோக்கம்

மாரி வளம் சுரக்க, மக்கள் நலம் பெற்று பசியும் பிணியும் நீங்கி வளமுடன் வாழ இவ்விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா ஆடி மாதம் 22 நாட்கள் சிறப்புற கொண்டாடப்படுகிறது. ஆடி மாதம் 18-ந் தேதியை அடிப்படையாக கொண்டே முக்கிய விழாக்கள் நிர்ணயிக்கப்படுகிறது. ஆடி 18ந் தேதிக்கு முந்தைய செவ்வாய்க்கிழமைகளில் முதல் செவ்வாய் பூச்சாட்டுதலும், இரண்டாம் செவ்வாய் கம்பம் நடுதலும் நடைபெறுகிறது. ஆடி 18-ந் தேதிக்கு பிறகு வரும் முதல் செவ்வாய்க்கிழமை சக்தி கரகமும், அதைத் தொடர்ந்து பொங்கல் வைத்தல், உருளு தண்டம் விழாக்களும் நடைபெறும். கடைசி செவ்வாய்க்கிழமை மகா அபிஷேகத்துடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. சேலம் மாநகரில் எட்டுப் பேட்டைகளிலும் உள்ள மாரியம்மன் கோயில்களி லும் ஆடிப்பெருந்திருவிழா மிகவும் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

### பூச்சாட்டுதல்

ஒவ்வொரு ஆண்டும் ஆடி 18-க்கு முன் வரும் முதல் செவ்வாய்க்கிழமை பூச்சாட்டுதல் விழா நடைபெறும். சேலம் கிச்சிப்பாளையத்தைச் சேர்ந்த சோழிய வேளாளர் சமூகத்தினர் கிச்சிப்பாளையம் நடராஜர் பசனை மடத்திலிருந்து பல வண்ண பூக் களையும், தேங்காய்ப் பழத் தட்டுகளையும் எடுத்துக் கொண்டு வந்து திருக்கோயிலை வலம் வந்து பூ சாத்துப்படி செய்வார்கள். இப்பூச்சாட்டுதல் முடிந்த பிறகு இங்கிருந்து பூ எடுத்துச் சென்று எட்டு பேட்டை களிலும் உள்ள மாரியம்மன்களுக்கு பூச்சாட்டு விழா நடைபெறும்.

### கம்பம் நடுதல்

ஒவ்வொரு ஆண்டும் பூச்சாட்டுதலுக்கு அடுத்து வரும் செவ்வாய்க்கிழமை ''கம்பம் நடுதல் விழா'' நடைபெறும். வேப்ப மரம், பலா மரம், அரச மரம் ஆகிய மரங்களில் ஏதாவது ஒன்றில் முப்புரி ஆக உள்ள கிளையை வெட்டி எடுத்து நன்கு சீவப்படும். இறைவன் திருஉருவம் எழுதி அழகிய முறையில் ஒப்பனைச் செய்து மங்கல இசையுடன் திருக்கோயிலை மூன்று முறை வலமாக வந்து பலிபீடத்தின் முன்பு அம்மனின் நேர் எதிரே கம்பம் நடப்படும். இவ்விழா அம்மனின் திருக்கல்யாணத்தைக் குறிக்கும். கம்பம் நடுதல் விழாவினை சேலம் சின்னக்கடை வீதியைச் சேர்ந்த ஆறுமுகக்கவுண்டர் மகன் தொப்பையன் குடும்பத்தார் செய்து வருகிறார்கள். அதன் பிறகு திருமணம் கூடிவராத இளம்பெண்கள் காலையில்

நீராடி திருக்கோயிலுக்கு வந்து கம்பத்திற்கு நீர் ஊற்றி மங்கலக் கோலத்துடன் உள்ள அம்மனை வணங்கி திருமணம் நடைபெற அருளுமாறு வேண்டிக்கொள்வர். மேலும், மழை வளம் வேண்டி பக்தர்கள் குறிப்பாக பெண்கள் திருக்கோயில் வெளிப்பிரகாரத்தைச் சுற்றி நீர் ஊற்றி மூன்று முறை வலம் வருவர். இதன் நோக்கம், ''மாரி குளிர்ந்தால் மண் குளிரும்'' என்பதே. மாரியம்மனை குளிர வைத்து மழை வளம் பெறுவார்கள்.

## சக்தி அழைப்பு

இத்திருக்கோயில் ஆடிப்பெருந்திருவிழாவில் திருவிழாவிற்கு முதல் நாள் திங்கட்கிழமை இரவு, சேலம் கிச்சிப்பாளையம் குலாலர் நடராஜர் பஜனை மடத்திலிருந்து சக்தி (காளியை) ஊர்வலமாக அழைத்து வருவார்கள். சக்திக்கு பச்சைபந்தல் (வேப்பிலையில்) போட்டு இரவு 12.00 மணிக்கு சக்தி பூசை நடைபெறும்.

## சக்தி கரகம்

சக்தி கரகம் செவ்வாய்க்கிழமை காலை திருக்கோயிலில் இருந்து புறப்பட்டு முதல் அக்ரஹாரம், இரண்டாவது அக்ரஹாரம், சின்னக்கடைவீதி, பஜார் வழியாக திருக்கோயிலை வந்து அடைந்தவுடன் பொங்கல் வைப்பது வழக்கம்.

## உருளுதண்டம்

பக்தர்கள் அம்மை போன்ற நோய் வராமல் இருக்கவும், தொழில், வியாபாரம் பெருகவும், உருளுதண்டம் போடுவதற்கு வேண்டிக்கொள்வர். வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் தங்கள் பிரார்த்தனையைச் செலுத்த இத்திருக்கோயிலுக்கு வந்து, உருளுதண்டம் போட்டு தங்களது பிரார்த்தனையைச் செலுத்துவார்கள். அன்று இரவு பகல் முழுவதும் இலட்சக் கணக்கான பக்தர்கள் உருளுதண்டம் போடுவார்கள்.

## பொங்கலிடுதல்

ஆடி 18-க்கும் அடுத்த செவ்வாய்க்கிழமை துவங்கும் உருளுதண்டம் மற்றும் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி மிகப் பிரசித்திப் பெற்றதாகும். பக்தர்கள் இலட்சக்கணக்கில் தங்கள் வேண்டுதல் நிறைவேற பொங்கல் மைதானத்தில் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைப்பார்கள். சேலம் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்து வரும் அனைத்து தரப்பு பக்தர்களும், தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தி அம்மன் அருள் பெறும் வகையில், அரசு ஆண்டுதோறும் ஆடிமாதம் மூன்றாம் செவ்வாய்க்கிழமைக்கு மறுநாள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கிறது.

## மகா அபிஷேகம்

ஆடிப்பெருவிழாவின் நிறைவு விழாவாக மகா அபிஷேகம் நடைபெறும். மழையின் மூலம் மண்ணையும், மக்களையும் குளிர வைத்த மாரி அம்மனுக்கு நன்றி செலுத்தவும், அம்மனின் உக்கிரம் தணியவும் பல்வேறு அபிஷேக பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்து மாரியம்மனை குளிர வைத்து மகிழ்ச்சி அடைவர்.

## பூசைக்கால விபரம்

இத்திருக்கோயிலில் உச்சிக்காலத்தில் மட்டும் ஒருகால பூசை நடைபெற்று வருகின்றது. இத்திருக்கோயில் நாள்தோறும் காலை 6.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும், பிற்பகல் 4.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரையிலும் நடை திறந்திருக்கும். மேலும், விநாயகர் சதுர்த்தி விழா, மகா சிவராத்திரி, தமிழ்ப்புத்தாண்டு, ஆங்கில வருடப் பிறப்பு, நவராத்திரி, கார்த்திகை தீபம், பொங்கல், தை அமாவாசைபோன்ற சிறப்பு நாட்களில் அம்மனுக்குச் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றது.

## திருக்கோயில் நிருவாகம்

சேலம் மாவட்டத்திலேயே புகழ்பெற்ற வேண்டுதல் தலமாக கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் விளங்குகிறது. இத்திருக்கோயில் நிருவாகத்தை முதல் நிலை செயல் அலுவலரும், தக்கார் பொறுப்பில் சேலம் உதவி ஆணையர் அவர்களும் கவனித்து வருகின்றார்கள். கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 40 இலட்சமாகும். இத்திருக்கோயிலுக்கு சொந்தமாக 50 கடைகள் உள்ளன. இக்கடைகளிலிருந்து வாடகையாக ஆண்டிற்கு ரூ. 4,22,622/- வருமானம் வருகின்றது. இத்திருக்கோயிலின் முக்கிய வருவாய் உண்டியல் காணிக்கை மூலம் வருகின்றது. அர்ச்சனை வகையறாசீட்டுக்கள் மூலமும் வருமானம் வருகின்றது. இத்திருக்கோயிலில் 12 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

## பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்குவதற்கு, இத்திருக்கோயிலின் அலுவலகத்தின் முன்பாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாநகரில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில், குறைந்த வாடகையில் திருமண மண்டபம் செயல்பட்டு வருகின்றது. பக்தர்களின் வசதிக்காக கழிவறை மற்றும் குளியலறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொங்கல் வைப்போர் தங்குவதற்கு பொங்கு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

ஓம் சேலம் கோட்டை பெரிய மாரியே
போற்றி போற்றி

# அருள்மழை பொழியும் அறுமுகச் செவ்வேள்

- பாம்பனார் பைந்தமிழ்அரசு ஸ்ரீலஸ்ரீ கருமாரி தாசர்

*(முன் தொடர்ச்சி)*

திருமாலின் கட்டளையை ஏற்ற நான்முகன் மனோவதி நகருக்கு வந்து, தமது ஆசனத்தில் வீற்றிருந்து தம்பியாகிய மன்மதனை வரவழைத்தான்.

மன்மதன் என்றால் என்ன? மனத்தினின்று தோன்றியவன். திருமால் மனத்திலிருந்து தோன்றியவன் மன்மதன். ஆசைதோன்றுமிடம் மனம்தான்.

மன்மதனைப் பார்த்து பிரம்மன் சொல்லலானார்: ''நீ ஒரு நல்லகாரியத்தைச் செய்யவேண்டும்! தேவர்களின் துயரம் தீர்வதற்கு, நீ சிவபெருமான் மீது பாணம்போட்டுபார்வதியம்மையார் மீது விரக தாபம் ஏற்படும்படி செய்வாயாக!'' என்று கட்டளையிட்டார்.

பிரம்மனின் கட்டளையைக் கேட்ட மன்மதன், அஞ்சினான்; அலறினான்; துடித்தான்; பதைத்தான்; பெருமூச்செறிந்தான். சிவபெருமானின் மோன நிலையை மாற்ற வேண்டுமென்றசொல், மன்மதனின் உள்ளத்தைச்சுட்டு எரித்தது. தவச்சிலருடைய மனத்தை மாற்றுவதே தவறு என்றால், சிவத்தின் மோனநிலையை மாற்றுவதென்பது எவ்வளவு கொடிய செயல், பாவச்செயல் என்று எண்ணினான்.

''அண்ணா! நான் உலகத்தையெல்லாம் மயக்குவேன்! என்னைப் பெற்ற தந்தையாகிய 'நாராயணரையும்' 'பிருந்தா' தேவியிடம் மையல் கொள்ளும்படி செய்தேன். உங்களையே திலோத்தமையைக் கண்டு விரும்பும்படி மயக்கியிருக்கிறேன். சூரியனை, அருணன் பெண்வடிவம் எடுத்தபோது அந்தபெண் மீது ஆசை கொள்ளும்படி செய்தேன்!

சந்திரனை 'குரு' பத்தினியாகிய 'தாரையின் பால்' காமம் ஏற்படும்படி செய்து; புதன் என்ற புத்திரனைப்பிறக்கும்படி செய்தேன். பல முனிவர்களின் தவவலிமையை ஒரு நொடிப்பொழுதில் மயக்கி என்வசப்படுத்தினேன்.

என் கணக்கில் தப்பியவர்கள் எவ்வுலகிலும் யாரும் இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் சிவபெருமானை துறவிகளின் தெய்வமாக விளங்கும் சிவபெருமானை எனது கணையால் ஒரு சிறிதும் மயக்கமுடியாது. ஏன் தெரியுமா? சிவபெருமான் திருக்கரத்தில் நெருப்பு; புன்முறுவல் பூத்து திரிபுரமெறித்த அவரது வாயில் நெருப்பு; நெற்றிக் கண்ணில் அக்னி; திருமேனி நெருப்பின் வடிவம்! அக்னியே உருவான சங்கரரை எரித்து உயிருடன் திரும்பமுடியாது. இதோ பாடல்:

> கையும் நகையும் கதிரார் விழியும்
> மெய்யும் தழலாம் விமலன் தனையான்
> எய்யும் படி சென்றிடின், இவ்வுயிர் கொண்டுய்யும்
> திறமும் உளதோ? உரையாய்!

இந்தக் கரும்புவில், சிவன்கொடுத்தது! புஷ்ப பாணம் அவன் தந்தது! தீட்டிய மரத்தில் கூர்பார்க்க முடியுமா? சிவபெருமான் பெருநெருப்பு!

இந்தக் காரியத்தில் மட்டும் என்னை ஏவாதீர்கள்! என்று பலவாறாகக் கூறினான் மன்மதன்!

பிரம்மன் கூறுகிறான் - தம்பி! நீ சொன்னவையெல்லாம் சரிதான்! முக்கண்ணனை வெல்ல யாராலும் முடியாது! என்றாலும் அவருடைய அருளால் உன்காரியம் நன்கு நடக்கும். எம்பெருமானை மயக்கச் செல்வதும் அவன் செயலே!

1. செம்மாந்து தற்புகழும் தேவர்குழுவும் மருள
   எம்மான் பிறன்போல இருந்தோர் துரும்புநீறீஇ
   அம்மா தன் செய்கை அனைத்துமெனக் காட்டினனே
   நம்மாலும் முற்றுஞ் சிலவென் கை நாணன்றோ?

2. பாடுதிகழ் பாவை பல்லுயிரும் அல்லனவும்
   ஆடல் புரிவிப்பான் அருவுருவாய் நின்றபரன்
   நாடில் அவனையின்றி நம்மாலொன் றாகவற்றோ
   ஏடஇதன் நிலைமை இந்நாளும் ஓர்ந்திலையோ?



ஒரு காலத்தில் தேவர்கள் தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டு கர்வம் அடைந்திருந்தனர். அதை அறிந்த சிவ பெருமான் ஒரு எச்ச வடிவம் கொண்டு நின்று ஒரு துரும்பை வைத்தார். அந்த துரும்பை வாயு, வருணன், இந்திரன் முதலிய அனைவராலும் அசைக்க முடியவில்லை. அதனால் அவன் அருளின்றி துரும்பும் அசையாது. எல்லாம் அவன் செயலே என்பதைக் காட்டி அருளினார். உயிர்களையும், உலகங் களையும் ஆட்டுவிக்கின்ற பரமன் அருளில்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. மன்மதன் நீ இதனை இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே!

***

எந்த வகையாலும் ஒருவன் ஒருவருக்கு ஓர் உதவியை தன்னால் முடிந்ததனை தானே புரிதல் உத்தமம். சொன்னப்பிறகு செய்தல் மத்திமம். பல முறை சொல்லியும் மறுத்து தாமதித்து செய்தல் அதமம்.

'என்னாலும் ஒருதவி யாதொருவின் யார்க்கெனினும்
தன்னால் முடிவதெனில் தானே முடித்தல் தலை
சொன்னால் முடித்தல் இடையாகும் சொல்லு கினும்
பின்னால் மறுத்து புரிதல் கடைப்பானமையதே.'

அழகிலும் அறிவிலும் சிறந்த மன்மதனே உன்னை நான் போகச் சொல்வது தேவர்களின் நன்மைக்காகத்தான். நீ போய் சிவபெருமானால் உயி ரிழந்தால் அது தேவர்களுக்குச் செய்த பெரிய தியாகம்? விருத்திராசூருனை வதைக்கும்பொருட்டு ததீசிமுனிவர் தன் முதுகெலும்பைத்தந்து உயிரிழந்த செய்தியை நீ அறியவில்லையா? பாற்கடலில் வட வாமுக அக்னிப்போன்ற விஷம் வந்தபோது நம்மை யெல்லாம் காப்பாற்றுவதற்காக நாராயணன் அந்த விஷத்தின் எதிரில் கணப்பொழுதுநின்று தமது மென்மையான திருமேனியை நீலக்கருமையாக்கிக் கொள்ளவில்லையா? இதையெல்லாம் அறிந்தும் தியாகம் செய்வதற்கு நீ அஞ்சுவது ஏன்? நான் சொன்னபடி செய்தால் உயிர் பிழைப்பாய். இல்லை யேல் சாபம் கொடுப்பேன். உனக்கு எதுவேண்டும் சொல் என்றான்.

மன்மதன் சிறிதுநேரம் சிந்தித்து பிரம்மனால் அழிவதைவிட சிவபெருமானால் அழிந்தால் உய் வதற்கு மார்க்கம் உண்டு என்ற முடிவுக்கு வந் தான். ''அண்ணா புறப்பட்டுவிட்டேன் '' என்று புறப்பட்டான்.

*(தொடரும்)*

**எங்கும் சிவமயம்**

**எதிலும் சிவமயம்**

**எல்லாம் சிவமயம்**

# வைணவத்தில் திருநீறு

- டாக்டர் டி. செல்வராஜ்

சிவச் சின்னம் திருநீறு. வைணவச் சின்னம் திருமண் ஆகியன இரண்டும் மண்ணின் இரண்டு வெவ்வேறு வகைகளாம். இவை இரண்டுமே 'உலகம் நிலையற்றது' என்ற நிலையாமையை உணர்த்துகின்ற சின்னங்களே.

வைணவத்தில் சிவச்சின்னமான திருநீற்றைப் பற்றிய சில குறிப்புகள் சிந்திக்கத்தக்கன.

**1. விநாயகர்**

திருவரங்கத்திருக்கோயிலில் ஓர் அதிசயமான விநாயகர் வீற்றிருக்கின்றார். இவரது திருநெற்றியில் திருநீறும், திருமண்ணும் ஒருங்கே திகழ்கின்றன. மிக அபூர்வமான தோற்றப்பொலிவு.

உண்மைதான். விநாயகர் சைவத்திற்கும், வைணவத்திற்கும் பொதுவானவர். எனவே, இவரது திருநெற்றியில் இரு சமயங்களுக்குரிய சின்னங்களை அணிவித்தனர். பெரும்பாலும், தெய்வத் திருமேனிகளில், திருநெற்றியில், இரட்டைச் சின்னங்களைப் புனைந்தவர் திருவரங்க விநாயகர் ஒருவராகத்தான் இருக்கமுடியும்.

**2. திருநீற்றுப்பிரசாதம்:**

பெருமாள் கோயில்கள் சிலவற்றில் திருநீற்றுப்பிரசாதம் வழங்கப்படுகிறது.

*அ. அழகர் கோயில்:* அழகர் கோயில் கருவறைக்கு முன்னுள்ள மகாமண்டபத்தில் வலம்புரி விநாயகர், விஷ்வக்சேனர், பைரவர் முதலியவர்களின் சன்னதிகள் உள்ளன. விநாயகர் சன்னிதியில் வழங்கப்படுகின்ற பிரசாதம் - திருநீறு.

அழகர் கோயில் ராஜகோபுரத்தின் வாயில் கதவுகள் எப்போதும் அடைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தலத்தின் காவல் தெய்வமான கருப்பண்ணசாமி அக்கதவுகளில் உறைவதாக நம்புகின்றனர். அக்கதவுகளையே சன்னிதிகளாகக்கருதி, கருப்பண்ணசாமிக்குப் பூசைகள் முதலியவற்றைச் செய்கின்றனர். அங்கே ஆடி அமாவாசை சிறப்பான வழிபாட்டு நாளாகும். அன்றையதினம் பக்தர்களுக்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கப்படுகிறது.

**ஆ. ஆலம்பாடி:** விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரத்திற்கு அருகில், ஆலம்பாடியில் பெருமாள்கோயில் ஒன்று உள்ளது. மூலவரின் பெயர் 'குண்டுசட்டிப்பெருமாள்''. சாளக்கிராம மூர்த்தி. இத்திருக்கோயிலில் திருநீற்றுப்பிரசாதம் வழங்கப்படுகின்றது.

**3. திவ்விய பிரபந்தத்தில் திருநீறு**

விஷ்ணு பெருமான் திருநீற்றை (திருமண்ணை)ப் புனைந்தவன் ஆவான்.

'கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன் ; விண்ணோர்
பெருமான்.''

என்பது நம்மாழ்வாரின் திருவாய்மொழி. *(4:5:6)*

திருமாலடியார்களும் திருநீற்றைப் புனைந்தனர். இதற்கும் திருவாய்மொழியில் ஒரு சான்றுண்டு. *(4:4:7)*

'நீறு செவ்வேயிடக் காணில்
நெடுமாலடியார் என்றோடும்''

திருமாலை அடையவேண்டும்

என்று பக்திப்பித்தேறிய தலைவியின் ஏக்கநிலையை எடுத்துக்கூறுகின்ற பாடலின் ஓரடி இது. 'திருநீற்றை(திருமண்ணை)க் கச்சிதமாக அணிந்திருக்கின்ற ஒருவரைத்தலைவி கண்டால், அவர் திருமாலின் அடியார் என்று அவரைத் தரிசிக்க ஆவலுடன் ஓடுகின்றாளாம்.''

நீறு = 1. திருநீறு - வைச்சார்புடைய பொருள்.
நீறு = 2. திருமண் - வைணவச்சார்புடைய பொருள்.

வாசகர் பொருந்திய பொருளை ஏற்கலாம்.

ஆழ்வார்கள் 'நீறு'' என்ற சொல்லால் திருநீற்றைக் குறிப்பிடுகின்றனர்.

1. ............ நீறாடி
தான்காண மாட்டாத தாரகலச் சேவடி''
நீறாடி = திருநீறு பூசிய சிவன்.

திருமழிசை ஆழ்வார். நான்முகன் திருவந்தாதி 27

2. .....'' உடலம் நீறும் பூசி ஏறூரும் இறையோன்''
இறையோன் = சிவன்.

திருமங்கையாழ்வார். பெரிய திருவந்தாதி 6:7:9

மேற்குறித்த ஆழ்வார்கள் இருவரும் சிவனை அவன் பூசிய திருநீற்றுடன் குறித்தனர்.

எனவே, வைணவத்தில் திருநீறு என்பது,

1. தெய்வங்களும் அடியார்களும் புனைகின்ற சிவச்சின்னம்.
2. பெருமாள் கோயில்கள் மிகமிகச் சிலவற்றில் வழங்கப்படுகின்ற பிரசாதம்.
3. சைவ, வைணவச்சமயங்களின் இணக்கத்தை எடுத்துக்காட்டுகின்ற ஒரு சான்று என்பது தெளிவாகப் புலனாகின்றன.

## வேறு சில மதங்களில் திருநீறு

வைணவ மதத்தினர் மட்டுமல்லாமல் வேறு மதத்தினர் சிலரும் திருச்சாம்பலை (திருநீற்றை)ப் புனிதமாகப் போற்றுகின்றனர்.

**1. சமணம்:** தமிழகத்தில் 'நீறுபூசும் வேளாளர்'' என்ற இனத்தவர் இப்போதும் வாழ்கின்றனர். இவர்கள் பழங்காலத்தில் சைவர்களாக மதம்மாறினர். திருநீறு புனைந்தனர், மாலைச்சந்திக்குப்பிறகு உண்ணாமல் இருத்தல் முதலிய சமணர்களின் ஒழுகலாறுகளை, விடாமல் பின்பற்றுகின்றனர். எனவே, அவர்கள் தோற்றத்தால் சைவர்; ஒழுக்கத்தால் சமணர்.

**2. கிறித்தவம்:** ஏசு பிறப்பதற்கு முன்னால் சிலர் திருச்சாம்பலை உடம்பெல்லாம் பூசிக் கொண்டனர். திருச்சாம்பல் வெண்மையானது - இலேசானது - மிருதுவானது. இதைப்போலவே மனமும், எண்ணங்களும் தூய்மையாக - இலேசாக - மிருதுவாக இருக்கவேண்டும் என்பது அவர்களது கருத்து.

மேலும், கிறித்தவர்கள் பிப்ரவரி மாதத்தில் 'சாம்பல் புதன்'' (ASH WEDNESDAY) என்ற புனித நாளைப் போற்றுகின்றனர். இந்த நாள் தொடங்கித் தொடர்ந்து நாற்பது நாள்கள் விரதம் காக்கின்றனர். அப்போது தூயமனத்தாலும், எண்ணங்களாலும், செயல்களாலும் தம்மைத்தாமே மேம்படுத்திக் கொள்கின்றனர்.

ஒரு புனித நாளான 'சாம்பல் புதன்'' என்ற பெயரில் உள்ள சாம்பலைப் போல மனமும், எண்ணங்களும், செயலும் தூய்மையாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். சாம்பலுக்குத்தரப்படுகின்ற ஏற்றம் கவனிக்கத்தக்கது.

**இஸ்லாம்:** மரியாதைக்குரிய இஸ்லாமிய இறைநேசச்செல்வர் ஒருவர் மரித்தால், அவரை அடக்கம் செய்கின்றதலம் தர்கா. இது பிரார்த்தனைத்தலம். இங்கே ஊதுபத்திகள் எரிந்த சாம்பலைத் தொகுத்து அடியார்களுக்கு ஒரு பிரசாதத்தைப்போல வழங்குகின்றனர்.

ஆகவே, வேறுமதங்கள் சிலவற்றில் திருச்சாம்பல் (திருநீறு) எந்த முறையிலாவது ஒரு புனிதப்பொருளாகப் போற்றப்படுகின்றது என்ற உண்மை தெளிவாகின்றது.

***

## வானமே மழைபொழிக !

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோல்முறை அரசு செய்க!
குறைஇலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்

— கந்தப்புராணம்

# நாகபயம் நீக்கும் மனஸாதேவி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

முன்னொரு சமயம் மனிதர்கள் பாம்புகளைப் பற்றிய அச்சம் மிகுந்தவர்களாய், காசிபமகரிஷியிடம் அடைக்கலம் புகுந்தார்கள். அதனால் காசிபர், பிரம்மனோடு சேர்ந்து, பலமந்திரங்களை உருவாக்கினார். வேத பீஜங்களுக்குத் தகுந்தாற்போல், பிரம்மாவின் ஏவற்படி இத்தேவியை மனத்தால் உருவாக்கியதால் அவள் 'மனஸாதேவி' என்று வழங்கப்பட்டாள்.

அந்த மனஸாதேவி கைலாயத்திற்குச் சென்று ஆயிரம் ஆண்டுகள் சிவபெருமானை பக்திசிரத்தையோடு பூஜைசெய்து வழிபட்டுவந்தாள். பக்தர்களின் பக்திக்கு அதிவிரைவில் மகிழ்ந்துவிடக்கூடிய சிவபெருமான் மனஸாதேவிக்கு மாபெரும் ஞானம் தந்து மிகவும் அன்போடு, அஷ்டாக்ஷரமானலக்ஷ்மி மாயாகாமபீஜத்தோடு உள்ள கிருஷ்ணமந்திரத்தை உபதேசம்செய்து, புரச்சரனை (மனப்பாடமாக சொல்லிக்கொண்டே இருப்பது) முறைமையையும், பூஜை முதலியவற்றையும் சொல்லி, புஷ்கரக்ஷேத்திரத்திற்குச்சென்று தவம்புரியும்படி கூறியனுப்பினார்.

அதன்படி மனஸாதேவி அத்திருத்தலத்தில் மூன்று யுகங்கள் தவம்செய்து, கிருஷ்ணரை தரிசித்து அவருடைய கருணையினால் சித்தியடைந்தாள். மென்மையான உடலோடு இருந்தவள், தவம் செய்ததினால் அந்தஇடத்தில் கட்டைப்போல் இருக்கும் அவளை பரமாத்மா விஸ்வபூஜிதா என்று கூப்பிட்டு அவளது கோரிக்கை ஈடேற அருள்செய்தார். அவளுக்கு கிருஷ்ணர்வரங்கள் வழங்க அவளை ருத்திரர், காசிபர் முதலானவர்கள் ஆதரிக்கும்படியும், மனுக்கள், மகரிஷிகள், மனிதர்கள், நாகங்கள் முதலானவர்களெல்லாம் வழிபடும்படியும் செய்தார். பிறகு ஜரத்காரு முனிவர், பிரம்மாவின் கட்டளையால் அவளை மணந்துகொண்டு வாழ்ந்தார்.

ஒரு சமயம் அவர் நீண்டகாலம் தவம்புரிந்து, களைப்புற்று தன் மனைவியான மனஸாதேவியின் தொடையில் தலைவைத்து இறைவனை நினைத்துப் படுத்துறங்கிவிட்டார்.

அப்பொழுது சூரியன் மறையும்நேரம் தொடங்கியது. பதிவிரதையான மனஸாதேவி சிந்தித்தாள். சாயங்காலம் சந்தியாவந்தனம் செய்யாமல் இருக்கிறவன் பிரம்மஹத்தியான பாபங்களை அடைகிறான் என்றும், காலைமாலை சந்தியாவந்தனம் செய்யாமல் இருப்பவன் பிரம்மஹத்தி முதலான பாபங்களால் அசுத்தவனாகிவிடுவான் என்றும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அதனால் தம்கணவர் பாவத்தையடைவாரே என்று நினைத்து, கர்மபயத்தோடு தம் கணவரை எழுப்பினாள். தூக்கமயக்கத்தோடு இருந்த ஜரத்காரு முனிவர் எழுந்ததும் கோபங்கொண்டு, 'பெண்ணே! நான் தூங்கும்போது நீ ஏன் என் தூக்கத்தைக் கெடுத்தாய்! எந்தப்பெண் தன்கணவனுக்கு அபசாரம் செய்கிறாளோ அவளால் இயற்றப்படும் அனுஷ்டானம், விரதம், தவம், தானம் அனைத்துமே பயன்தரமாட்டாது. கணவனுக்கு எதிரான காரியங்கள் செய்பவள், விருப்பமற்றவார்த்தைகளைப்பேசுபவள், தன்மனம்போனபடி செய்பவளும் ராட்சச வர்க்கத்தில் பிறந்தவளுக்குச் சமமேயாவாள். அவள் சூரியசந்திரர் உள்ள காலம்வரையில் கணவன் மகன் இல்லாத சண்டாளியாகப் பிறப்பாள்'', என்றார்.

உடனே மனஸாதேவி அச்சம்கொண்டு, 'சுவாமி! உங்களுக்கு சந்தியாவந்தன தர்மம் கெட்டுவிடுமே என்ற பயத்தால்தான் உங்கள் தூக்கத்தைக் கலைத்து உங்களை எழுப்பிவிட்டேன். சிருங்காரம், ஆகாரம், நித்திரை இவற்றிற்கு பங்கம் விளைவிப்பவர் சந்திரர் சூரியர் உள்ள காலம் வரையில், காலசூத்ர நரகையடைந்து அவதியுறுவாரே!'' என்று கூறிவிட்டுத்தன் கணவரின் காலடியில் விழுந்து பயபக்தியோடு ஓவென அழுதாள்.

ஜரத்காரு முனிவர் அவளைசபிக்கமுயன்றார். அப்போது சூரியன் சந்தியாதேவியோடு வந்து அம்முனிவரைச்சந்தித்து, 'அந்தணரே! நீர் உம் மனைவியைச் சபிப்பது உசிதமல்ல, அஸ்தமன காலம் வந்துவிட்டதே என்று உணர்ந்து பயத்தால் தான் அவள் உம்மை தூக்கத்திலிருந்து எழுப்பினாள். நீர் வெகுண்டெழுந்து அவளை நிந்தித்தீர்! உடனே அவள் உம்மை சரணடைந்துவிட்டாள். தவமியற்றும் அந்தணர்களின் இதயம் எப்பொழுதும் வெண்ணையைப்போன்றது. அவர்களுக்கு அரைகணம்தான் கோபம் இருக்கும். ஆனால் அதற்குள் இந்த உலகமே சாம்பலாகி விடும். மறுபடியும் உலகத்தை படைப்பதற்கு அந்த அந்தணனைவிட ஆற்றலும்

தேஜஸீம் உள்ளவன் வேறு எவனுமில்லை. பிராம் மணர் பிரம்மாவின் அம்சம். ஆகையால் அவர்கள் பிரம்மதேஜஸியைப் போல் எப்பொழுதும் பிரகாசித்துக் கொன்டும், பரப் பிரம்மமூர்த்தியையே தியானித்துக் கொண்டிருப்பார்கள்'', என்றார்.

அதைக்கேட்டதும் முனிவர் மகிழ்ந்து தம் வாக்கை நிறைவேற்ற முனைந்து, அழுதுகொண் டிருக்கும் மனஸாதேவியை விட்டு நீங்கித்தமதிடம் சென்றார். மனம்வருந்திய மனஸாதேவி தன் குருவான ஜம்புநாதரையும், இஷ்ட தெய்வங்களான பிரம்ம விஷ்ணுக்களையும், தனக்குப்பிறவியளித்த காசிப ரையும் நினைத்தாள். அவர்கள் எல்லோரும் அவள் முன்னால் தோன்றினார்கள். அவர்களை மனஸா தேவி வணங்கி, துயரத்தோடு தனக்கு நேர்ந்ததைக் கூறினாள். அப்போது பிரம்மா, மகாவிஷ்ணுவை நோக்கி, 'இவளுடைய கணவன் புத்திரஉற்பத்தி செய்யாமல், எப்படி இவளை, கைவிட்டுப்போக லாம்? ஆகையால் அறநெறிப்படி புத்திரஉற்பத்தி செய்யவேண்டும். எவன் புத்திரப்பேறளிக்காமல் துறவு வைராக்கியம் பூண்டு, தனது இல்லற தர்மத்தையும் மனைவியையும் விட்டுவிடுகிறானோ, அவனது புண்ணியமெல்லாம், ஜல்லடையில் விட்ட தண்ணீ ரைப்போல் வீணாக ஒழுகிப்போய்விடும்'' என்றார்.

அதைக்கேட்டதும் ஜரத்காரு முனிவர் மந்திரப்பூர்வமாக மனஸாதேவியின் நாபியைத் தொட்டு, 'மனஸாதேவியே! இந்தக் கர்ப்பத்தால் உனக்குப் பிறக்கும் புதல்வன் சிறந்த புலனடக்கம் உடைய வனாகவும், தர்மசிலனாகவும், அந்தணரில் அதி உத்தமனாகவும், வேதமுணர்ந்தவனாகவும், தேஜஸீ மிக்கவனாகவும், புகழ் வாய்ந்தவனாகவும், தவஞானி யாகவும் விளங்குவான். தவயோகிகளுக் கும், ஞானி களுக்கும் அவன் தலைவனாகவும், ஈசுவரபக்தி யுடையவனாகவும், குலத்தைக் கடைத் தேற்றுப வனாகவும், திகழ்வான். அவன் பிறந்த வுடனேயே பித்துருக்கள் மகிழ்ச்சியில் கூத்தாடுவார் கள்'' என்றார்.

அதைக்கேட்டதும் மனஸாதேவி துக்கம் மேலிட்டவளாக தன் கணவனை நோக்கி, 'குருவே! நாயகரே! நான் உமது தூக்கத்தை கெடுத்ததற்காக என்னைவிட்டுவிடவேண்டிய தோஷம் எதுவு மில்லை. நான் எப்போது எங்கே உம்மை நினைப் பேனோ, அப்போது அங்கே நீங்கள் எனக்கு தரிசனம் தரவேண்டும் உறவினரை விட்டுப் பிரிந்திருப்பது பெரும்துக்கம்; புத்திரனைப் பிரிந்திருப்பதோ அதை விடத்துக்கம்; பிராணநாயகனைப் பிரிந்திருப்பது என்பதோ அதைவிடதுக்கம், தான் உயிரையே விட்டுப் பிரிந்திருப்பதற்கு இணையாகும்'', என்றாள்.

ஜரத்காரு முனிவரும் பத்தினியிடம் விடை பெற்றுக்கொண்டு தவம் புரியச் சென்றார்.

மனஸாதேவி மிகவும் பக்தியோடு தன் குரு வான பரமேஸ்வரரிடம் சென்றாள். பார்வதிதேவி, அவளைப்பார்த்து இரக்கம்கொண்டு சிவமூர்த்தியைக் கொண்டு அவளுக்கு ஞானஉபதேசம் செய்வித்து, மகிழ்ச்சியுடன் வாழச்செய்தாள்.

மனஸாதேவி சிலநாட்கள் கழிந்தபிறகு ஒரு சுபவேளையில் ஒரு நல்ல ஆண்மகனைப் பெற்றாள். அந்தப்புத்திரன் கர்ப்பவாசத்திலேயே தாயுடன் ஞானோபதேசத்தைப் பெற்றுணர்ந்தவனாகையால் , அவனது ஞான தேஜஸைக்கொண்டு, ஞானியரும், யோகியரும் வேதங்கள் நான்கையும் கற்பித்தனர். அவன் குருபக்தியிலும், காலத்தைக் கடந்தவனே பரம்பொருள் என்ற ஞானத்திலும் சிறந்து விளங்கிய தால் அவன் 'ஆஸ்திகன்' என்று சிவபெருமானிடம் பெயர் பெற்றான். பிறகு அவர் ருத்திரரிடமே மந்திர உபதேசம்பெற்று, புஷ்காரத் திற்குச்சென்று, மூன்று லட்சம் ஆண்டுகள் தவம் புரிந்துவிட்டு, ருத்ர மூர்த்தியிடம் சிலகாலம் தங்கி விட்டு, தன்தாய் மனஸாதேவியுடன் காசிபரிடம் சென்றார்.

அப்போது பரீக்ஷித்தின் குமாரனான 'ஜனமேஜயன் தன் தந்தை சர்ப்பத்தால் மடிந்ததை நினைத்து, கோபங்கொண்டு சர்ப்பயாகம் செய்ய துவங்கினான். அதன் விளைவாக எல்லா பாம்புகளும் அந்த யாகத்தீயில் வந்துவிழுகிறபோது, பரீக்ஷித்தைக் கொன்றதட்சன் என்ற சர்ப்பராஜன் தேவேந்திரனிடம் சரணடைந்து அவனது பாதுகாப்பில் இருந்தான். அதை யறிந்த அந்தணர்கள் இந்திரனையும் தட்ச னுடன் சேர்த்து சம்ஹரிக்க முயன்றார்கள். இந்திரன் முதலான தேவர்களெல்லாம் பயந்துநடுங்கி மனஸா தேவியிடம் சென்று முறையிட்டார்கள். அவள் தன் புத்திரனான ஆஸ்திகரைக் காட்டினாள். உடனே இந்திரன் முதலானவர்களெல்லாம் ஆஸ்திகரிடம் சென்று 'எங்களுக்கு உயிர்பிச்சை தரவேண்டும்'', என்று வேண்டினார்கள்.

ஆஸ்திகரும் அவர்களது வேண்டுகோளுக் கிரங்கி, சர்ப்பயாகம் நடக்குமிடம் சென்றார். அவர் ஜனமேஜயனிடமும், யாகம் செய்யும் அந்தணர் களிடமும் யாகத்தை நிறுத்தும்படி சொல்லிநிறுத்தி னார். அந்த யாகத்தை முடித்துவிட்டு, அந்தணர் களுக்கும், அனைவருக்கும் தானங்கள் கொடுத்து மகிழ்வித்து அனுப்பினார்.

இந்திரன் முதலானோர் மனஸாதேவியை போற்றிப் பூஜித்தார்கள்.

முறைப்படி நீராடி புனிதஆடையணிந்து ஒரு மண்டபம் அமைத்து, ரத்தின சிங்காசனத்தில் மனஸா தேவியை வீற்றிருக்கச்செய்யவேண்டும். பக்தியோடு கங்கா நீரைக்கலசத்தில் கொண்டுவந்து அபிஷேகம் செய்து, தூய்மையான ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து, சந்தனம்பூசி, மாலைகள் அணிவித்து, மலர்கள் அர்ச்சித்து, பஞ்சாயதன பூஜை செய்து, பிறகு மனஸா தேவியை பூஜித்து 'ஸ்ரீமனஸாதேவியை ஸ்வாஹா'' என்று அர்க்யம், பாத்ய ஆசமனாதிகளால், ஷோட சோபசாரங்கள்செய்து, வாத்யமுழக்கம் செய்வித்து, மலர்மாரி பூக்களைச் சொரிந்து, புளகாங்கிதத்தோடு வணங்கிப் பின்வருமாறு போற்றி இசைக்க வேண்டும்.

'பதிவிரதைகளில் சிறந்த உன்னை துதிக்கிறேன்; பராபரையான உன்னைத் துதிக்கும் வல்லமை எனக்கில்லை; வேதத்தில் உன்னைத் துதிக்கும் குணம் விவரிக்கப்பட்டுள்ளது; அதை எடுத்துச் சொல்ல எனக்கு சக்தியில்லை! நீயே சுத்த தத்துவ சொரூபிணி, கோபத்தையும் இம்சையையும் நீத்திருப்பவள் ஆகையால் ஜரத்காரு முனிவர் உன்னிடம் குறை காணாமல் உன்னை யாசித்தார். நல்லொழுக்கமுடைய நீ எனக்கு சகோதரியாவாய்! க்ஷாமரூபமான நீ, எனக்குத் தாயுமாவாய்; உன்னால் எனது புத்திர களத்திராதிகள் காக்கப்பட்டனர். உன்னை வழிபட்டுப் பூஜிக்கிறேன்; சகலஉலகங்களுக்கும் அன்னையான தேவியே! ஆடிமாதத்தில் முதல்நாள் முதலோ, ஆடிமாதத்து பஞ்சமியிலோ, மாதமுடிவிலோ, தினந்தோறுமோ உன்னைப் பூஜிப்பவர்களுக்கு புத்திர பௌத்ராதிகளும், பொன்பொருள் முதலான செல்வமும் பெருகும். அவர்கள் புகழோடும், ஞானத்தோடும், குணத்தோடும் சிறந்து விளங்குவார்கள். நின்னை நிந்திப்பவர்களே பொருளற்றவர்களாகவும் எல்லாபயங்களும் உடையவர்களாகவும் இருப்பார்கள். வைகுண்டத்தில் லக்ஷ்மிவிஷ்ணுவோடு இருப்பதுபோல, ஜரத்காரு முனிவரை நீ அனுசரித்திருக்க உன்னை உன் தகப்பனார் படைத்தார். என்னைக் காத்தருள, நீ மனஸாதேவி' என்ற பெயருடன் திகழ்கிறாய். சக்தியின் அம்சத்தால் நீ மனஸாதேவியாக அவதாரம் செய்தாய். இப்பொழுது சித்தயோகினியாகத் திகழ்கின்றாய். எதனால் தேவர்கள் மனஸா தேவி என்று போற்றுகின்றனர் என்றால், நீ உண்மையின் வடிவமானவள். எவன் மனத்தால் உன்னை தியானிக்கிறானோ அவன் உன்னை அடைவான்'', என்று தோத்தரித்து பாலினால் அபிஷேகம்செய்து இந்திரன் மிகவம் விருப்பத்தோடு பூஜித்தான். தேவி அவனுக்கு அபூர்வமான ஞானத்தை உபதேசித்தாள். இந்தத் துதியுடன் தேவியைப் பூசிப்பவனுக்கும் அவனது வம்சத்தினருக்கும் சர்ப்ப பயமில்லை. விஷங்கூட அமிர்தம்போலாகி விடும். இந்தத்துதி சித்தியாக ஐந்துலக்ஷம் தரம் ஜபிக்கவேண்டும்.

காசிபமகரிஷியின் மனத்தகத்தே தோன்றியதாலும், பரமாத்மாவான சர்வேஸ்வரனையே மனதால் தியானிப்பதாலும், இவள் மனஸாதேவி என வழங்கப்படுகிறாள். இவள் சித்தயோகினியாய் மூன்று யுகம் தவம்செய்தாள். அப்போது தவம்செய்யும் இடத்தில் கட்டைபோல் இருக்கும் அவளை, பரமாத்மா 'விஸ்வபூஜிதா' என்று கூப்பிட்டு அவளது கோரிக்கை ஈடேற அருள் செய்தார். அவளை சகலரும் பூஜிக்கச் செய்து, தானும் பாராட்டியதால் 'விஸ்வபூஜிதா, ஜகத்கௌரி' என்னும் பெயர்களைப் பெற்றாள். சிவ சிஷ்யையானதால் 'சைவை' என்றும், விஷ்ணுப் பிரியையாகையால் 'வைஷ்ணவி' என்றும், பரீக்ஷித்து மன்னன் மகன் நடத்திய யாகத்தில் நாகசர்ப்பங்களைக் காப்பாற்றியதால் 'நாகேஸ்வரி' என்றும், 'நாகபகனி' என்றும், விஷத்தைப்போக்கும் சக்தியுடையவளாகையால் 'விஷஹரி' என்றும், ஈஸ்வரரிடம் சித்தயோகத்தை அடைந்ததால் சித்தயோகினி என்றும் வழங்கப்படுகிறாள்.

அந்த தேவியை, மகாஞானவடிவினளாகவும், யோகஸ்வரூபிணியாகவும், மிருக சஞ்சீவினியாகவும், மகாஞானமுடையவளாகவும் அறிஞர் போற்றுகின்றனர். ஆஸ்தீக முனிவருக்கு அன்னையானதால் ஆஸ்தீகமாதா என்றும், ஜரத்காரு முனிவருக்கு பிரியையாக இருந்ததால் ஜரத்காருப்ரியை என்றும் வழங்கப்படுகிறாள். 'ஜரத்காரு' ஜகத்கௌரி, மனஸா, சித்தயோகினி, வைஷ்ணவி, நாகபகனி சைவீ, நாகேஸ்வரீ, ஜரத்காருப்ரியா, ஆஸ்தீக மாதா, விஷஹரி, விஸ்வபூஜிதா, என்ற இந்த பன்னிரு நாமங்களையும் பூஜையின்போது எவன் ஒருவன் ஓதுவானோ அவனுக்கும், அவனது வம்ச பரம்பரைக்கும், சர்ப்பங்களால் பயம் இராது. எவன் ஒருவன் இதை நாள்தோறும் ஓதுகிறானோ அவனைப் பார்த்தாலே பாம்புகள் யாவும் பயந்தோடிப் போகும்.

இதைப் பத்துலக்ஷம்தடவை ஜபித்தால், 'சித்தியாகும்; அவ்விதம் 'சித்தி' பெற்றவன் விஷத்தையும் சாப்பிடும் சக்தியுடையவனாவான். விஷ சர்ப்பங்களையே ஆபரணமாக அணிந்து சர்ப்பத்தின் மீது, ஏறிநிற்கக்கூடியவனாகவும் விளங்குவான். பாம்பின் மீது படுத்து, 'சித்த' புருஷனைப்போலவும் திகழ்வான். கடைசியில் விஷ்ணுவோடும் கூடியிருப்பான்.

'வெண்சம்பக மலர்போன்ற வெண்ணிறத் தோடும், பத்திரபுஷ்ப அலங்காரங்களோடும், மகா நினைவோடும், தூய ஆடையோடும், பாம்புமாலை களோடும் அதிஷ்டான தேவதையாகவும் விளங்கும் தேவியை, நான் வணங்குகிறேன்' என்று தியானித்து மலர்கள், தூபதீபங்கள், முதலியவற்றாலும் வேத முறைப்படியான மூலமந்திரங்களாலும் பூஜை செய்ய வேண்டும்.

பஞ்சமியில் இத்தேவியைத் தியானித்து நமஸ்கரித்து, 'பலி' நடத்துபவன், செல்வந்தவனாகவும், புத்திரப்பேறும், புகழ்வாய்ந்தவனாகவும் விளங்கு வான்.

சாமவேதத்தில் சொல்லப்பட்டுள்ள மனஸா தேவியின் தியானத்தையும், பூஜாவிதியையும் பற்றி ஸ்ரீமந்நாராயணர், நாரதமுனிவருக்குக் கூறியதாக, தேவிபாகவதம் மிக விரிவாகக் கூறுகிறது.

கங்கை முதன்முதலாக சமவெளிக்குப் பாய்ந்து வரும் புனிதத்திருத்தலம் 'ஹரித்வார்'.

இங்கிருக்கும் ஹரி-கீ-பௌடீ' (திருமால் திருவடி பதிந்த இடம்) என்ற கங்கைத்துறையில், அந்தப்புண்ணிய நதியில் நீராடி, சற்றுமேலே நிமிர்ந்து பார்த்தால், இயற்கை எழிலோடு ஒரு குன்றம் தெரியும். அந்தக் குன்றின்மீதுதான், ஸ்ரீமனஸாதேவி எழுந் தருளி அருளாட்சி செய்து கொண்டிருக்கிறாள்.

இந்த சக்தி தெய்வத்தைத் தரிசிப்பதற்கு குன் றின்மீது நடந்தும் செல்லலாம்; 'ரோப்வே' எனப் படும் மிதந்து செல்கின்ற தொங்கும் தொட்டில் களில் அமர்ந்தும் செல்லலாம்.

ஸ்ரீமனஸாதேவி தனது திருச்சந்நிதியிலே தரணி யிலுள்ள மாந்தர்களின் நல்வாழ்விற்கு அருளாசி வழங்கியபடி கொலுவிருக்கிறாள். அன்னையைக் கண்டவுடன் மனம்பக்திப்பூரிப்புடன் நிறைகிறது! திரள் திரளாகவரும் பக்தர்கள் முழுத்தேங்காய், அரிசிப் பொரி போன்ற இனிப்புகள், ஜரிகை வேலைப்பாடு அமைந்த புதுத்துணியும் அன்னைக்கு சமர்ப்பித்து, சந்நிதியை வலம்வருகின்றனர்.

ஒரு தெய்வீகமரம்; பல்லாயிரக் கணக்கான வருடங்களாக இங்கு இருக்கிறதாம். கங்கணக்கயிற்றை (மஞ்சள் சிகப்பு கலந்த நூல்) எடுத்து, நமக்கு 'பலித'மாக, வேண்டிய எண்ணங்களை மனதில் நினைத்து, தேவியை தியானித்து இந்த மரத்தில் கட்டினால், உடனடியாக அந்தப்பலன் தெரியும் என்று கூறுகின்றனர். பலபக்தர்கள் அந்த மரத்தில் கங்கணக் கயிற்றைக் கட்டியபடி இருப்பதைக் காணலாம்.

மேலும் இந்த தேவி மிகமிக சக்தி வாய்ந்த வள் என்றும், எண்ணிய எண்ணங்களை நிறை வேற்றிவைப்பவள் என்றும், வேண்டும் பிரார்த்தனை களை பூர்த்திசெய்பவள் என்றும், மனஸாதேவியின் அருளால் தங்கள் வாழ்க்கையில், நடைபெற்ற அற்புதங்களையும் அன்பர்கள் விவரமாகச் சொல் வதைக் கூறக்கேட்கலாம்.

மனமெல்லாம் நிறையும் மனஸாதேவியை நாமும் சென்று, கண்டுகளித்து, நம் எண்ணங்களை யும் நிறைவேற்ற வேண்டிக்கொள்வோமாக!

***

## வானமே மழைபொழிக!

*வாழ்க அந்தணர்! வானவர் ஆனினம்!!*
*வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!!*
*ஆழ்க தீயது! எல்லாம் அரன் நாமமே*
*சூழ்க! வையமும் துயர் தீர்கவே!!*

*— திருஞானசம்பந்தர்*

# கந்தர் அநுபூதி

**- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி**

கந்தர் அனுபூதியில் இன்னுமொரு பாடலின் நயம் காண்போம்.

செவ்வான் உருவில் திகழ்வே லவன் அன்று
ஒவ்வா ததென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே

**சுருக்க உரை:**

முருகவேள் உணர்த்திய ஞானோபதேச நிலையை அனுபவிக்கலாமே ஒழிய, பிறருக்கு எடுத்துச் சொல்ல இயலாது. இக்கருத்தினைத் தழுவியே, ஏனைய புலவர்களும் சுட்டிக்காட்டியுள்ளதைப் பார்ப்போம்.

'அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்''
- (தாயுமானவர்)

**கருத்து:**

அவரவர்கள் அனுபவத்தாலே தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி, பிறருடைய முயற்சியால் ஒருவர் பெறமுடியாது - என்பதாகும். மேலும் இதே கருத்தினை திருமூலர் கையாண்டுள்ளதைக் கவனிக்கலாம்.

''மகளுக்குத்தாய், தன் மணாளனோடு
ஆடியசுகத்தை
சொல்லெனில் சொல்லுமாறு எங்ஙனே''

மதுரகவி ஆழ்வார், சடகோபரையே குருவாகஏற்று, அவரிடம், ''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் அது எத்தைத்தின்று எங்கே கிடக்கும்'' என வினவியதற்கு 'அது அத்தைத்தின்று அங்கே கிடக்கும்'' என்பதாக பதிலளித்தையும் இங்கு ஒப்பிட்டுப்பார்ப்பது சிறப்பாகும். சடகோபர் கூறியதின் உட்கருத்தை வார்த்தைகளால் சுட்டிக் காட்டுவது அவ்வளவு எளிதல்ல என்பது புலனாகிறது.

சுந்தர் அனுபூதி ஆசிரியர், தாம் பாடிய திருப்புகழிலும், கந்தரலங்காரத்திலும் விரிவாக பாடியுள்ளதைக் காண்போம்.

**திருப்புகழ் பாடல்**


வாசித்துக் காணொணாதது
பூசித்துக் கூடொணாதது
வாய்விட்டுப் பேசொணாதது - நெஞ்சினாலே,
மாசர்க்குத் தோணொணாதது
நேசர்க்குப் பேரொணாதது
மாயைக்குச் சூழொணாதது - விந்துநாதம்;
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது - கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தை போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ?

முதல் 3 சீர்களில் முருகன் உணர்த்திய ஞானோபதேச நிலை எத்தன்மையது என்பது பற்றி கூறியள்ளதை ஒப்பிட்டுப்பார்ப்பது சிறப்பாகும்.

திருப்புகழ் பாடல் 'ஓலமறைகள் அறைகின்ற' எனத்துவங்கும் பாடலின் முதல் 3 சீர்களில் பாடியுள்ளது கீழே கொடுக்கப்பட்டுள்ளதை கவனிக்கலாம்.

ஓல மறைகள் அறைகின்றவொன்றது
மேலை வெளியிலொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியைக் கிரியையும் புணர்ந்தவ - ரெவராலும்
ஓத அரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனுமுயிரு முழுதுங் கலந்தது - சிவஞானம்;
சாலவுடையதவர் கண்டுகொண்டது
மூலநிறைவு குறைவின்றி நின்றது
சாதிகுலமுமில தன்று...

இத்தகு அரிய ஞானோபதேச நிலையைக் குறித்து எவ்வாறு அடியேனால் பகர முடியும் என்கிறார் ஆசிரியர் அருணகிரியார். இனி கந்தர் அலங்காரத்தில் இதே கருத்தினை அருணகிரியார் பாடியுள்ளதை சிறிது ஆராய்வோம்:-



சண்முகஞானபுரம் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலில் அருணகிரிநாதர் சன்னிதி புனருத்தாரணம் செய்யப் பட்டு இவ்விழாவில் தவத்திரு செந்தில் துறவி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

*கந்தர் அலங்காரம்*

''வேலே விளங்குகையான் செய்யதாளினில்
வீழ்ந்திறைஞ்சி
மாலே கொள விங்ஙன் காண் பதல் லான்மன
வாக்குசெய
லாலே யடைதற்கரிதாய்அ ருவுருவாகியொன்று
போலே இருக்கும் பொருளை எவ்வாறு
புகல்வதுவே''

*அருவுருவாகி ஒன்றே போலே இருக்கும் அப்பரமானந்த பொருளை எவ்வாறு எடுத்துச் சொல்ல இயலும் என்று முருகனிடமே முறையிடுகிறார். மேலும் ஒரு கந்தர் அலங்காரம் பாடல்:-*

''போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில்லாதொன்று வந்து வந்து
தாக்கும் மனோலயம்தானே தரும் எனைத்
தன் வசத்தே
ஆக்கும் அறுமுக வாசொல்லொணாதிந்த
ஆனந்தமே''

*இப்பாடலின் இறுதியிலும், அனுபூதிப்பாட லில் பாடியுள்ளதைப் போல், அந்த ஞானோப தேசத்தை எவ்வாறு சொற்களால் வடிவமைத்துக் கூறப்படும் என்றது ஈன்று உணரற்பாலது.*

*அருணகிரியாரது அனுபூதிப்பாடலின் கருத்தை யொத்தே, அப்பரடிகள் திருவினாத்தாண்டகம் - பதிகத்தில் - 10-வது செய்யுளில் பாடியுள்ளதை மேற் கோளாக ஒப்பிட்டு பார்ப்போம்.*

''மைப்படிந்த கண்ணாளுந் தானும் கச்சிமயானத்தான்
வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஒரூரனல்லன் ஒருவமனில்லி

அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணில் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே''

*அப்பரடிகள், திருப்பூவணம் திருத்தாண்டகத் தில் 3-வது செய்யுளில் மணிவாசகரைப் பற்றி வரும் குறிப்பொன்றில் பாடியுள்ளதையும் நோக்குவது அவசியம்:-*

''கல்லாலின் நீழலில் கலந்து தோன்றும்
கவின் மறையோர் நால்வர்க்கு நெறிகளன்றிச்
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்
சூழரவும் மான்மறியுந்தோன்றும் தோன்றும்
அல்லாத காலனை முன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து
தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த்தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனாரே''

தட்சிணாமூர்த்தி குறித்து பாடிய பாடல் ஒன்றில்:-
''கல்லாவின் புடைஅமர்ந்து நான்மறை
ஆறங்க முதல்கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்''

*இதில் சொல்லாமல் சொன்னவரை எனும் பதத்தை கூர்ந்து கவனித்தால், அருணகிரியார் கூறிய, ''அவ் வாறறிவார் அறிகின்றதலால்'' என்று கூறியதின் பொருள் ஒருவாறு ஊகித்தறியலாம்:-*

# ''சன்னதியை மறைக்காதீங்கோ''

– சிறுகதைச் சித்தர் ஏ.வி. ராஜகோபால்

(ஆலய வழிபாட்டின்போது பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை இச்சிறுகதை நயம்பட விவரிக்கின்றது)

தேசிகன் வேகமாக நடந்தார்.

இந்த வேளைக்கு கோவிலில் தீபாராதனையை ஆரம்பித்து விட்டிருப்பார்கள்.

அவர் போனால் தான் அங்கு எல்லாம் ஒழுங்காக நடக்கும். தேசிகன் இன்னமும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

தேசிகன் டெல்லி பைனான்ஸ் டிபார்ட்மெண்டி லிருந்து ஓய்வுபெற்று சென்னை திரும்பிவந்த ஒரு அரசாங்க அதிகாரி. ஓய்வுக்குப்பிறகு சென்னையில் ஒரு வீடு வாங்கினார். அவர் வீடு இருக்கும் காலனிக் குப் பக்கத்தில் ஒரு சின்னஞ்சிறு பழைய காலத்து ஆஞ்சனேயர் கோவில். கேட்பாரற்றுக்கிடந்த அதற்கு அந்தக் காலனி வந்த பிறகு மவுசு வந்துவிட்டது. தேசிகன் அந்தக் கோவிலுக்குப் போக ஆரம்பித்த காலத்தில் ஒன்றைக் கவனித்தார். அந்த சிறிய கோவிலில் தீபாராதனை சமயம் கூட்டம் நிரம்பி வழியும். ஆரம் பத்தில் கொஞ்சம் ஒழுங்காக சன்னதிக்கு இருபுற மும் நிற்பவர்கள் பெருமானுக்கு கற்பூர ஆரத்தி காட்டப்படும் சமயம் கலைந்து ஒன்றாகக் கலந்து சன்னதியையே மறைத்துவிடுவார்கள். ஒருநாள், இரண்டு நாள் பார்த்தார் தேசிகன். பொறுக்கமுடிய வில்லை. பட்டாச்சாரியிடம் சொன்னார். பட்டாச்சாரி தொண்டு கிழவர். 'நா என்ன பண்ணட்டும்? இவா எல்லாம் சொன்னா கேக்க மாட்டா' என்று சொல்லி விட்டார்.

தேசிகன் பார்த்தார். 'ஏதாவது செய்தால் நன் றாக இருக்குமே? 'டெல்லியில் உயர் அதிகாரியாக இருந்தபோது எவ்வளவு பேரைவிரட்டி வேலை வாங்கி யிருக்கிறோம்? இந்த சாதாரண ஜனங்களையா ஒழுங்கு படுத்தமுடியாது!' யோசித்தார். அத்த ஆஞ்சனேயர் சன்னதிக்கு எதிரில் சுவர், அந்தச் சுவரில் ஸ்ரீராமபிரா னின் பட்டாபிஷேகம் படம் வரைந்திருந்தார் கள். அதற்குக்கீழே சுவற்றை ஒட்டினாற்போல் தரையில் படுக்கவைத்த நிலையில் ஒரு கல் தூண்மீது ஏறி நின்று கொள்ள ஆரம்பித்தார். பெரு மானுக்கு கற்பூர ஆரத்தி காட்டப்படும் வேளையில் சன்னதிக்கு இருபுறமும் நிற்கும் ஜனங்கள் தரிஸனத்திற்கு முட்டி மோதும் வேளையில் 'விலகுங்கோ, விலகுங்கோ', 'சன்னதியை மறைக்காதீங்கோ' எனக் குரல் கொடுப் பார். அவர் குரல் கம்பீரமானது. அதுவும் பல வருடங் கள் உயர் அதிகாரியாக இருந்தவரின் குரல் ஆணவ மும், அகங்காரமும் கலந்தது. அவர் குரல் உரக்க ஒலித்த உடன் எல்லோரும் அதற்குக் கட்டுப்பட்டு இரண்டு பக்கமும் ஒதுங்கி நிற்பார்கள். தரிசனம் கிடைக்காமல் திண்டாடி இவரால் இம்மாதிரி தரிசனம் கிடைப்பவர்கள், இவரை நன்றியுடன் பார்ப்பார்கள். ஓரிருவர் 'நீர் தான் ஸ்வாமி கரெக்ட்' என்று இவரிடம் வந்து சொல்வார்கள். இம்மாதிரி நன்றிப் பார்வைகள், புகழ்ச்சி வார்த்தை கள் தேசிகனை மேலும் ஊக்குவித்ததனால் அவர் கண்டிப்பும் அதிகாரமும் நாளுக்கு நாள் அதிக மாயின. 'பிரதட்சணம் பண்றப்போ என்ன பேச்சு?' என்று யாரையாவது கடிந்து கொள்வார். 'பிரசாதக் கையை அலம்பணும், காகிதத்தால் துடைத்தால் எப்படி?' என்று வேறு யாரையாவது கண்டிப்பார். தனக்கு மரியாதை, தன் சொல்லிற்கு பயம் என்ற நிலையில் அந்த சந்தோஷத்தில் சிறிய திருவடியின் தரிசனத் திற்காகப் போகிறாரோ இல்லையோ தினமும் சரியான நேரத்திற்கு இந்த திருப்திக்காக போய் வருகிறார்.

அன்று அவர் அவசரமாகக் கோவிலில நுழை யும் வேளையில் தீபாராதனை நடப்பதற்கான ஒரு அறிகுறியும் இல்லை. ஒரு சிலர் வழக்கத்திற்கு மாறாக பளிச்சென்று திருமண் இட்டுக்கொண்டு யாரையோ எதிர்பார்ப்பது போல் நின்றுகொண் டிருந்தார்கள்.

'என்ன இன்னமும் தீபாராதனை ஆரம்பிக்க வில்லை?' தேசிகன் மிடுக்காக விசாரித்தார்.

'இன்றைக்கு ஜீயர் கோவிலுக்கு வரப் போகி றாராம். அதற்குத் தான் எல்லோரும் காத்திருக்கிறார் கள்.' பதில் வந்தது.

திடீரென ஒரு பரபரப்பு. வேத கோஷங்கள் முழங்க, தன் பரிவாரங்கள், பக்தர்கள் சூழ ஜீயர்

வந்து கொண்டிருந்தார். நல்ல பழுத்த பழம். சிகப்பு நிறம். பெரிய நெற்றி. கண்களில் அருள் ஒளி. பார்ப்ப தற்கே தெய்வீகம் நிறைந்தவராகக் காணப்பட்டார்.

அவர் காலில் பலர் விழுந்து சேவித்தார்கள். தேசிகனுக்கு அது பிடிக்கவில்லை. இதென்ன, மனி தனை மனிதன் வணங்குவது, அந்த மனிதன் எவ் வளவு பெரியவனாக இருந்தாலும்?

கோவிலில் தீபாராதனை ஆரம்பமாயிற்று. கர்ப்ப கிருகத்திலேயே ஜீயர் நுழைந்து, ஒரு பக்கமாக நின்று கொண்டார். சன்னதியின் இருபுறமும் சரி யான கூட்டம். தேசிகன் தன் வழக்கமான இடத் தில் நின்றுகொண்டார்.

கற்பூர ஆரத்திநேரம். இன்று நிச்சயம் சன்னதி யைப் மறைப்பார்கள். அந்த பரபரப்பில் தேசிகன் தன்னை தயார்படுத்திக்கொண்டார்.

பட்டாச்சாரி வழக்கத்திற்கு மாறாக மந்திரங் களை கம்பீரமாகச் சொல்லி கூடத்தை காட்டும் வேளையில், உள்ளே கர்ப்ப கிருகத்தில் ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்த ஜீயர் நகர்ந்து நேராக நடுவில் வந்து நின்று கொண்டுவிட்டார்.

சன்னதியில் இருபுறமம் நின்று கொண்டிருந்த வர்களுக்கெல்லாம் சிறிய திருவடியின் தரிசனம் கிடைக்காமல் ஜீயரின் முதுகு மட்டும் தெரிந்தது.

யாராவது குரல் எழுப்புவார்களா என்று பார்த்தார் தேசிகன். 'சரியான ஆட்டு மந்தைகள்!' தேசிகன் கனைத்துக்கொண்டார். 'சன்னதியை மறைக்கா தீங்கோ'' கணீரென குரல் எழுப்பினார்.

அவர் குரலைக் கேட்டு பலர் திடுக்கிட் டதுபோல் தோன்றியது. சிலர் முகத்தில் கடுகடுப்பு துல்லியமாகத் தெரிந்தது. ஒருத்தர் 'ஆமா, இந்தக் கிழத்துக்கு வேறு வேலையே கிடையாது' என்று சலித்துக்கொண்டது தேசிகன் காதில் விழுந்தது. ஜீயர் திரும்பினார். முகத்தில் குழந்தைத்தனமான புன்சிரிப்பு. சன்னதியிலிருந்து இறங்கி கிடுகிடு வென வெளியே வந்து, தேசிகனை நோக்கி ஆசிகூர் வது போல் கையசைத்து கோவிலை விட்டுக் கிளம் பினார்.

கோவிலிருந்தவர்கள் தேசிகனை ஏதோ குற்ற வாளியைப் பார்ப்பது போல் பார்த்தார்கள். தேசிக னுக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. தான் செய்தது பெரும் தவறோ? அவர் மனம் அரித்தது.

நாள் முழுவதும் தேசிகனுக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஜீயர் எவ்வளவு பெரியவர்! அவரிடமே இப்படி அல்பத்தனமாக நடந்து கொண்டு விட்டேனே!

மாலை ஜீயர் தங்கியிருக்கும் இடம் தேடிக் கிளம்பி விட்டார். ஜீயர் இவரைப் பார்த்தவுடன் புன்னகைத்தார். தேசிகனுக்கு மனம் சங்கடப்பட்டது. ஜீயர் பேசினார். 'கார்த்தாலே, நீங்க பகவானை தரிசிக்காம முடியாம மறைச்சுட்டேனில்லே? என்னை க்ஷமிக்கணும்?'' கைகளைக் கூப்பினார். தேசிகனால் அதற்கு மேல தாங்க முடியவில்லை. அழுகை வந்து விட்டது. எவ்வளவு பெரியவர்! நம்மை மன்னிக்கச் சொல்கிறாரே! ஜீயரின் கால்களில் தடா லென விழுந்து சேவித்தார். 'ஸ்வாமி, நான் தப்பு பண் ணிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க'' நா தழுதழுக் கச் சொன்னார்.

ஜீயர் அமைதியாகப் பேசினார். 'மன்னிக் கிறதா? எதுக்கு? நீர் பண்றது ஒண்ணும் தப்பில்லையே, தொண்டாச்சே, இது மாதிரி யாரு ஆலய விஷயங் களில் அக்கறை எடுத்துக்கறா? ஆனா, ஒண்ணு, நீர் எல்லோரையும் 'சன்னதியை மறைக்காதீங்கோன்னு சொல்றச்சோ உம்மையறியாமலேயே ஒரு தப்ப பண்ணிடறீர்'' ஜீயர் நிறுத்தினார்.

தேசிகன் புரியாமல் விழித்தார். ஜீயர் புன்னகை யுடன் தொடர்ந்தார்.

'ஆஞ்சனேய ஸ்வாமி எப்படிப்பட்டவர்? ராமதூதன். ராமபிரானின் சேவகன். 'ராமன் இருக்கு மிடம் அயோத்தி'ன்னு சொன்னா சீதாப்பிராட்டி. ஆனா இந்த அனுமன் அதற்கும் மேலே போய் என்ன சொன்னான் தெரியுமா? ராமநாமம் சொல்லப் படும் இடமெல்லாம் நானிருப்பேன் அப்படின்னார். அந்த அனுமானுக்கு கற்பூர ஆரத்தி காண்பிக்கப் படும்போது, அவர் என்ன நினைப்பார், 'ஸ்ரீ ராமச் சந்திர பிரபு, இந்த கௌரவம் எனக்கு உன்னால் வந்ததப்பா, இதெல்லாம் உனக்கு சேர வேண்டிய தப்பா'' அவர் அப்படி நினைத்து பக்தியில் உருகு கிற வேளை தீபாராதனை வேளை. அப்போது நீர் எங்கிருக்கிறீர்? அங்கு உமக்கு பின்னால் சுவரில் இருக்கும் ராமபிரானின் சித்திரம், அவன் தொண்டன் ஆஞ்சனேயனுக்கு தெரியாமல் பண்ணி விடுகிறீரே? ஜனங்களுக்கு ஆஞ்சனேயர் சன்னதி மறைக்காமல் பார்த்துக்கிறீர். ஆனால் ஆஞ்சனேய ஸ்வாமிக்கு எம்மான் ஸ்ரீராமபிரான் தரிசனம் கிடைக்காமல் நீர் மறைத்து விடுகிறீரே!''

கண்களில் நீர் வழிய தேசிகன் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கண்ணீரில் அவர் கர்வம் கரைந்து கொண்டிருந்தது.

***

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா – விரிவுரை

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt; P.hD;

## 4. மலைத்தேன் என மலைத்தேன்!

தந்தரக்கலை அறிவனோ? மந்த்ரகலை அறிவனோ?
சாரும் உபதேச கலையில்
தந்த கயிலாச பாரம்பரிய மாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ?
அந்தரத்து உயர்மலைத் தேனினுக்கு ஓர்முடவன்
ஆசைவைத்தது போலவே
ஐயனே! நின் அருளை அடைவதற்காசை வைத்து
அடியேன் முகம்வீங்கி நின்றேன்.
சந்த்ரசேகர! சகள! நிஷ்கள! தயாபர!
சதாசிவ! சிதாகாயமாம்
சபாநாத! சுந்தரானந்த கல்யாண குண
சர்வேச! தேவ தேவே!
உந்துந் தரங்கமெறி கங்காதரா! கயிலை
உறைகின்ற பரதெய்வமே!
ஒன்றாகி, ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

'தரங்கம்' என்றால் அலை என்று பொருள். அலைகள் மோதிக்கொண்டு கரையை உடைக்கும் வேகத்துடன் பெருக்கெடுத்து வரும் கங்கை ஆறு அத்தகைய வேகத்துடன் தற்போது பூமியில் ஓடிக் கொண்டிருக்கிறது. அது ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்தபொழுது எவரும் தாங்கவொண்ணாக் கடுவேகத் துடன் அலைகளை வீசிக்கொண்டு வந்தது. அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த ஈசன் அதனைத் தன் சடை யில் தாங்கினான். கங்கையைத் தரித்ததால் அன்று முதல் அவனைக் 'கங்காதரன்' என அழைக்கலாயினர்.

'உந்துந் தரங்கமெறி கங்காதரா!'' என இத் திருவருட்பா நான்காவதுபாடலின் நான்காவது அடி யில் ஈசனை அழைக்கிறார் சுவாமிகள்.

கங்கையை மட்டுமா தரித்தான்? அவன் சந்திரனையும் அழகாகச் சூடிய சந்திரசேகரன்.

மேலான கருணையுடையவன். அதாவது அவன் தயாபரன். சதாசிவன். சிதாகாசமென்னும் தில்லையில் நடனமாடும் சபாநாதன். அவன் ஐந்து சபைகளுக்குத் தலைவன்.

| | |
|---|---|
| தில்லையில் பொன்னம்பலம் | (கனகசபை) |
| மதுரையில் வெள்ளியம்பலம் | (ரஜதசபை) |
| திருநெல்வேலியில் செப்பு அம்பலம் | (தாமிர சபை) |
| திருக்குற்றாலத்தில் ஓவிய அம்பலம் | (சித்திர சபை) |
| திருவாலங்காட்டில் மணியம்பலம் | ( ரத்ன சபை) |

இப்படி ஐந்து சபைகளுக்குத் தலைவன். சபாபதி மற்றும் சபாநாதன் என்பர். தூயதமிழில் சபாபதியை 'அரங்கண்ணல்' என்பர்.

அழகும் மகிழ்ச்சியும் உடையவரானதால் 'சுந்ரானந்தன்' என்றார். மங்களகரமான இனிய பண்பு கள் உடையவன். அனைத்துக்கும் ஈசன். ஆதலால் 'கல்யாணகுண சர்வேசன்'' என்கிறார். தேவர்களுக்கும் தேவன். அதாவது தேவதேவன்.

'இவ்வாறு ஒப்புயர்வற்றுத்திகழும் உன் னருளை அடைய என்னிடம் என்ன தகுதி உள்ளது? அடியேன் எக்கலையில் வல்லவன்?'' என்று பணி வுடன் வினவுகிறார் ஆசிரியர்.

முழுவதும் மந்திரங்களைக் கொண்டு வழி படுவது 'மந்திர அத்வா' அல்லது 'மந்த்ரக் கலை' எனப்படும். பஞ்சாட்சரம் என்னும் திருவைந் தெழுத்தை உரியமுறைப்படி தக்க குருநாதரிடம் உபதேசமாகப் பெற்று அதன் வழியே சிவானுப வத்தை எய்தலாகும். அதுவே, சைவநெறியில் தலையாய மந்திரக் கலையாகும். வேதமந்திரங்கள் அனைத்தின் சாரமாகவும் 'ஸ்ரீருத்ரம்' என்னும் பகுதி யின் நடுநாயகமாகவும் உயிர்நாடியாகவும் உள்ளது நமச்சிவாய மந்திரம். 'வேதம் நான்கினும் மெய்ப் பொருள் ஆவது'' என்று நான்மறை தந்த ஞான சம்பந்தர் போற்றிய மந்திரமும் அதுவே.

'காமிகம்' முதலான ஆகமங்களை ஈசனே தன்னிடமிருந்து வெளிப்படுத்தி வழிபடுவோரின் வசதிக்காக அருளியுள்ளான். சாக்த தந்திரம் சிவதந்திரம்,

கௌமார தந்திரம் என்றெல்லாம் வழிபாட்டு முறைகளைச் சான்றோர்கள் வகுத்துக் கொடுத்துள்ளனர். அவை பூஜா தந்திரங்கள் அல்லது 'தந்த்ரக் கலை' எனப்படும்.

மந்திர வழியிலான வழிபாடு அனைவருக்கும் இயலாது. எல்லா இடங்களிலும் இயலாது. ஆகவே தந்திரங்கள் என்ற எளிய வழிபாட்டுமுறையைப் பற்றி நிற்பர்.

அசுரன் வேதங்களை மறைத்துவைத்துவிட்டான். வேதமந்திரங்களின் வழியே திருமாலை பூஜித்துவந்த சான்றோர்கள் வேதமந்திரங்கள் இல்லாமல் ஐந்து இரவுகள் திருமாலை, தாந்ரீகமுறையில் வழிபட்டனர். அதாவது தூப, தீப உபசாரங்கள் மட்டும் கொடுத்து வழிபட்டனர். ஐந்து இரவுகளில் பின்பற்றிய தாந்ரீகமான பூஜாமுறையே 'பாஞ்சராத்ரம்' என்ற வழிபாட்டு முறையாயிற்று என்பர்.

அவ்வகையில் 'மந்த்ரகலை'யை விட 'தந்த்ர கலை' சற்று எளிமையான வழிபாட்டு அணுகுமுறை எனலாம்.

தந்திரகலையில் தேர்ச்சிபெற்றவர்களைக் கேரளத்தில் இன்றும் 'தந்த்ரிகள்' என்று அழைக்கும் வழக்கம் உள்ளது.

திருக்கயிலையில் ஈசன் சில இறைநுணுக்கங்களை நந்தியம் பெருமானுக்கு உபதேசம் செய்தான். அவை ரிஷிகளின் வழியே யோகிகள் மற்றும் பூவுலக குருநாதர்களுக்கு உபதேசிக்கப்பட்டது. அதனைப் பின்பற்றியே சைவ மடாலயங்கள் - ஆதினங்கள் இயங்கத் தொடங்கின. மூலஉபதேசம் முதலில் கயிலையில் கிடைத்ததால் அம்மடாலாயங்களை - ஆதினங்களை, 'திருக்கயிலாய பரம்பரை' என்ற தனிச்சிறப்புடன் அழைக்கலாயினர்.

'ரிஷிகள் வழியே வந்த மந்திரக்கலையிலும் அடியேன் வல்லவன் இல்லை. உபாசகர்கள் வகுத்தளித்த தந்திரவழிபாட்டுமுறையிலும் வல்லவன் இல்லை. கயிலையிலிருந்து நந்தியம் பெருமான் வழிஈசன் கொடுத்த உபதேசச் சிறப்புடன் திகழும் திருமடத்தின் நடைமுறைகளிலும் வல்லவன் இல்லை.''

ஸ்ரீசிவஞான தேசிக சுவாமிகள் இவை மூன்றிலும் வல்லவராகத் திகழ்ந்தவர்கள் எனினும், மிகச் சிறந்த சான்றோர்களுக்கே உரிய அடக்கத்துடன் தன்னை ஏதும் அறியாதவன் என்று கூறிக்கொள்கிறார்.

'ஜபம் ஒன்றறியேன் தபம் ஒன்றறியேன்'' என்று புரந்தர தாசர் தம் கீர்த்தனையில் கூறிக்கொள்வது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

'எதிலும் வல்லமை அற்ற அடியேன் உன் அருளை அடைய விரும்புவது நடக்கவே இயலாதவன் மலைத்தேனுக்கு அவாவுற்றது போலாகும்''

உடல் ஊனத்தைத் தொடர்புபடுத்தி உரைக்கும் ஒரு பழமொழியை இங்கு எடுத்தாண்டுள்ளார். அக்காலச் சான்றோர்கள் எவர் மனதும் புண்படப் பேசமாட்டார்கள். அப்படிப் பேசுவது அவர்களின் நோக்கமும் அல்ல. உவமை நயத்தை மட்டுமே கருதி இப்பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது எனத் தெளிதல் வேண்டும்.

மயிலாடுதுறை ஐப்பசி நீராடலின் நிறைவு நாள் 'கடைமுகம்' எனப்படும். அதனையும்விடச் சிறந்தது கார்த்திகை முதல் நாளில் நீராடல். ஏனெனில், உடல் ஊனமுற்றவருக்காக ஈசன் அன்று சிறப்பான தரிசனமும் பலனும் அருளுகிறான்.

ஐப்பசியில் முப்பது நாட்களிலும் நீராட இயலாதவர்களும் ஊனமுற்ற பக்தர்களுக்காக ஈசன் அருட்செய்த நாளில் (கார்த்திகை முதல்நாளில்) நீராடினால் துலாஸ்னானத்தின் முழுப்பலனும் கிடைக்கும் என்பது ஐதிகம்.

மயியலாடுதுறையில் காவிரியின் வடபாலுள்ள வள்ளலார்கோயில் தட்சிணாமூர்த்தியை இப்பாடல் போற்றுகிறது.

எனவே, இப்பாடலைப் பாராயணம் செய்வோர் துலா(ஐப்பசி) நீராடலின் முழுப்பலனையும் எய்துவர் என்பது திண்ணம்.

***

# துக்க நிவாரண அஷ்டகம்

- தவத்திரு துர்க்கை சித்தர்

(இதனைப் பாராயணம் செய்வோர் அம்பிகை அருளால் இடர்கள் தீர்வர்; இகபரசுகம் பெறுவர்)

பராசக்தி துணை

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீங்கிடச் சடுதியில்
வந்திடும் சங்கரி சௌந்தரியே

கங்கண பாணியன் கனிமுகங்
கண்டநல் கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 1

கானுறு மலரெனக் கதிர்ஒளி
காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி
மதியொளி தாங்கியே வீசிடுவாள்

மானுறு விழியாள் மாதவர்
மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 2

சங்கரி சௌந்தரி சதுர்முகன்
போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி
வைத்துப் பொருந்திட வந்தவளே

எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்த நல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரிக்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 3

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்

பணபண பம்பண பறையொலி
கூவிடப்பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 4

பஞ்சமி பைரவீ பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு
வேழனைக் கொடுத்த நல்குமரியளே.

சங்கடம் தீர்த்திடச் சமரது
செய்தநற் சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 5

என்னிய படிநீ யருளிட
வருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது
நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்

கண்ணொளியதனால் கருணையே
காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 6

இடர்தரு தொல்லை இனிமேல்
இல்லை யென்று நீசொல்லிடுவாய்
சுடர்தரு அமுதச் சுருதிகள்
கூறிச் சுகமது தந்திடுவாய்

படர்தரு இருளின் பரிதியாய்
வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌளி க்ருபாக
துக்க நிவாரணி காமாக்ஷீ 7

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி

ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளீ
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷீ 8

# திருநாவுக்கரசர் காட்டும் சிவலோக நெறி

– N. சிவராமன், B.Com.(M.L)

'இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர் பாவங் கெடுத்தேழை யேனை உய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறி அறியச் சிந்தை தந்த
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றாநாள் போக்கினேனே''

- ஆறாம் திருமுறை (அப்பர்)

சிவ லோக நெறி என்றால் திருவருளில் மூழ்குவது (அல்லது) திருவருளில் ஆன்மா ஒடுங்குவது என்பதே. ஆணவத்தின் பிடியிலிருந்து ஆன்மா விடுபடுதல் என்றும் சொல்லலாம்.

இவ்வாறு உயிரானது விடுதலை பெறின், 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' அதற்கு இல்லை. மீண்டும் பிறத்தல்; மீண்டும் இறத்தல் இல்லை என்பது இதன் பொருள்.

இதனை அடைய என்னச் செய்யவேண்டும்?

முதலில் உயிரில் உள்ள 'ஆணவம்' என்ற இருளை நீக்கவேண்டும். இருள் தன்னை மட்டும் காட்டி, பிறபொருளை மறைக்கும். ஆனால், ஆணவம் தன்னை மட்டுமல்ல, தன் உள்ளே உறையும் உத்தமனையும் காட்டாது.

ஆணவம்தான் மாயா மலமும், கன்ம மலமும் உண்டாவதற்கு தாய்.

இயல்பாகவே, உயிர் அறிவுடையதுதான். இதனை அறியாமையில் வீழ்த்துவது ஆணவமே. வெள்ளை ஆடை உள்ளது. அதில் உள்ள அழுக்கை நீக்க, நீக்க வேட்டி வெள்ளை அடையும். அதுபோல, ஆணவ அழுக்கு போனபின், அறிவு இயல்பாக வெளிப்படும்.

பின், என்ன துன்பம்? ஒன்றுமில்லை எனலாம்.

இத்தகைய ஆணவத்தை எப்படிப் போக்குவது? ஏதாவது, சோப்புவிற்கிறதா? இல்லை. இறைவனை வணங்கினால் போதும்.

'எட்டு நாள் மலர்கொண்டவர் சேவடி ஏத்துமின்' என்பார் அப்பர்.

'புகையெட்டும் போக்கெட்டும் புலன்கள் எட்டும்
பூதங்களவையெட்டும் பொழில்கள் எட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சியெட்டுங்
கழற்சேவடி அடைந்தார் களைகணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மையெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்
திகையெட்டும் தெரிப்பதற்கு முன்னோ! பின்னோ!
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!

- 6ம் திருமுறை

எவையெவை எட்டு மலர்கள்? இரண்டு விதமான பூசைகள் உண்டு. அகப்பூஜை, புறப்பூஜை, சண்பகம், நந்தியாவட்டை, பாதிரி, அரளி, புன்னை, எருக்கு, தாமரை, நீலோற்பலம் ஆகிய எட்டு மலர்கள் கொண்டு வழிபடுவது புறப்பூசை.

இதைவிடச் சிறந்தது மனப்பூசை. அகத்தில் 8 மலர்கள் உள்ளன என்கிறார் அப்பர். என்னென்ன?

1. கொல்லாமை
2. புலனடக்கம்
3. சாந்தம்
4. அன்பு
5. தியானம்
6. தவம் ( சகிப்புத் தன்மை)
7. சத்தியம்
8. மெய் அறிவு

இம் மலர்களைக் கொண்டு பூசித்தால், இறைவன் திருவருள் உடனே சித்திக்கும்.

பூசலார் நாயனார் தம் மனத்திலேயே கோயில் கட்டவில்லையா?

இப்பொழுது ஆணவம், அறிவிலிருந்து நீக்கப் பட்டுவிட்டது அல்லவா? பின், உண்மையான அறிவு வரும்பொழுது, மனம் தெளிவடைகிறது.

பின் தெளிந்த மனதில், சிவம் வெளிப்படாமல் இருக்குமா? இருக்காது. பின் என்ன, சிவலோக நெறி சித்திப்பது கடினமா என்ன? இல்லை.


பின், சிவப்பதவி அருகில்தானே.....

'அன்பும், சிவமும் வேறல்ல; அன்பினுள்ளே சிவமும், சிவத்தினுள்ளே அன்பும் உள்ளன. அமைதி அடைந்தவுடன், தியானத்தில் இரண்டும் ஒன்றே வேறல்ல என்கின்றார் திருமூலர்.

***

# தாய் துணைவர வேண்டும்

- கவிஞர் இராஜேஸ்வரி விசுவநாதன்



விருப்பம் போல வாழ்வை நடத்த
வசதிகள் வாய்ப்புகள் வேண்டும்!
திருப்பம் வாழ்வில் திடுமென வந்திட
திறக்கும் அதிர்ஷ்டம் வேண்டும்
பருப்பும் ரசமும் பண்ணு வதற்கும்
பக்குவம் தெரிந்திடல் வேண்டும்
கருப்பும் வெள்ளையும் கலந்திட நாலும்
கருணை விளைந்திடல் வேண்டும்.
விரும்பிய படியே வெற்றியை அடைய
வியர்வை சிந்திட வேண்டும்

விரும்பும் போது வேண்டிய செய்ய
வரவில் சேர்க்க வேண்டும்
நெருங்கும் நேர்மை நித்திய வாழ்வில்
நிச்சயம் காக்க வேண்டும்
திரும்பும் போது தேர்ந்தவற்றை
திருப்பிப் பார்க்கவேண்டும்.

துரும்பும் கூட துணைக்கு உதவும்
துருப்பாய் நினைத்திடல் வேண்டும்
இரும்பும் தானே இளகிடும் நேரம்
இயல்பாய் வந்திடல் வேண்டும்
எறும்பும் ஏறி யானையை அடக்க
எண்ணி முயலுதல் வேண்டும்
குறும்பும் மழலையும் குழந்தையில் ருசிக்கும்
குலவி மகிழ்ந்திடல் வேண்டும்
கரும்பை வளர்த்து காசாய் மாற்றி
கடனை அடைக்க வேண்டும்

அரும்பை பறித்து அனுப்பிவைத்து
அசலைக் கூட்ட வேண்டும்
குரும்பை களெல்லாம் குலையாய் மாறி
கொடுக்கும் தென்னை வேண்டும்
வரும் பை முழுதும் வருவாய்நிறைக்க
விளைச்சல் கூட வேண்டும்.
வரும்படி எல்லாம் வளர்படி ஆக
வணங்கும் அவளருள் வேண்டும்
தரும்படி கோரி தகும்படி துதிக்க
தனந்தரும் தாயருள் வேண்டும்
வெறும்படிகூட வரும்படி தந்திட
வரங்களும் அவள்தர வேண்டும்
பெறும்படி அனைத்துப் பேறினைத் தந்து
பெருந்தாய் துணைவர வேண்டும்.

* * *

# ஸ்ரீ ராமானுஜர்

-இந்திரா ஆரா அமுதன்

விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ராமானுஜர் 120 வருடங்கள் வாழ்ந்து, தானான திருமேனியுடன் ஸ்ரீரங்கம் அரங்கநாதனின் வஸந்த மண்டபத்தில் கோயில் கொண்டுள்ளார் என்பதும் அவர் ஆதிசேஷனின் அவதாரமாக அவதரித்தவர் என்பதும் எல்லாரும் அறிந்த விஷயம். மேலும், அவர் 200 வருடங்கள் வாழவேண்டும் என்று விரும்பியதால் மறுபடியும் சேஷனின் உருவமாக ஸ்ரீ மணவாளமாமுனிகளாக அவதரித்து 80 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார் என்பதையும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ராமானுஜருக்கு 18 திரு நாமங்கள் உண்டு. அவைகள் என்ன என்பதையும், அவைகள் எந்த தெய்வங்களால் சூட்டப்பட்டன என்பதைப் பற்றியும் சிலவற்றைப் பார்ப்போம்.

### அவரின் திருநாமங்கள்

1. எம்பெருமானார் (2) இளையாழ்வார் (3) யதிராஜர் (4) உடையவர் (5) லக்ஷ்மணமுனி (6) சடகோபன்பொன்னடி (7) கோயிலண்ணன் (8) ஸ்ரீ பாஷ்யகாரர் (9) பூதபுரீசர் (10) தேசிகேந்திரர் (11) யதீந்திரர் (12) யதுகுலதுர்யர் (13) யதிஸார்வ பௌமர் (14) யதிசக்ரவர்த்தி (15) யதிபதி (16) யதிநாதர் (17) யோகிந்தரர் (18) க்ருபா மாத்ர ப்ரஸந்நாசார்யா.

யாரால், எதற்காக இந்த திருநாமங்கள் அவர் மேல் சூட்டப்பட்டன என்று சிலவற்றைப் பார்ப்போம்.

### எம்பெருமானார்

ரஹஸ்யார்த்தங்களை கற்றுக் கொள்ள இவர் திருக்கோஷ்டியூர் நம்பியிடம் 18 முறைகள் சென்றார். இப்போதைய காலத்தைப் போன்று பஸ், ரயில் வசதிகள் இல்லாத அந்த காலத்தில் எவ்வளவோ கஷ்டப்பட்டு போய்ச்சேர்ந்தாலும் நம்பிகளின் பாராமுகத்தைக் கண்டு சிறிதும் மனவருத்தம் அடையாமல் திரும்ப திரும்ப முயன்று கடைசியில் ஜெயித்தார். திருக்கோஷ்டியூர் நம்பி தான் சொல்லிக்கொடுத்ததை யாருக்கும் உபதேசிக்கக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். அதை மீறி மறுநாள் சிலருக்கு உபதேசித்ததை அறிந்த நம்பி இவரை அழைத்து கடிந்து கொண்டார். அதற்கு பதிலாக ''உங்கள் கட்டளையை மீறியதால் நான் ஒருவன் தானே நரகத்துக்கு போவேன். ஆனால் உங்கள் அருள் வாக்கைக் கேட்பவர்கள் எல்லாரும் உஜ்ஜிவிப்பார்களே என்கிற நல்ல எண்ணத்தில் தான் அவர்களுக்கு உபதேசித்தேன்'' என்ற ராமானுஜரின் வார்த்தைகளைக் கேட்ட நம்பி, ''இது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே'' என்று மிகவும் உவந்து அவருக்கு ''எம்பெருமானார்'' என்கிற விருதைச் சூட்டினார். எம்பெருமானார் என்றால் எமக்கும் எல்லாருக்கும் தலைவர் என்று பொருள். மிகவும் பொருத்தமான பெயரைத்தானே நம்பி அவருக்குச் சூட்டியிருக்கிறார், இல்லையா!

### யதிராஜர், லக்ஷ்மணமுனி

ராமானுஜரின் மனைவி தஞ்சம்மாள் எனப்படுவார். மிகவும் ஆசார சீலமுடையவர். தன் கணவர் நான்காம் வருணத்தவருடன் சகஜமாக பழகுவதை விரும்பாதவர். அதனால் ராமானுஜர் சொன்ன மூன்று சம்பவங்களில் எதிர்மாறாக செய்ததால் அவரைத் துறந்தார். முதலாவதாக திருக்கச்சி நம்பிகளுக்கு அமுது படைக்கும்படி தேவிக்கு கட்டளையிட்டார். தேவியும் அவருக்கு உணவளித்தபின் அவர் சாப்பிட்ட இலையைக் கோலால் தள்ளி அந்த இடத்தை சுத்தம் செய்வித்து விட்டு தானும் நீராடி வந்தார். இதைப் பார்த்த ராமானுஜருக்கு மனைவிமீது கோபமும், ஆசாரியன் உணவருந்துவதைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்காமல் போனதே என்று வருத்தமும், அவருக்கு தன் மனைவி அவமானம் செய்ததையும் அறிந்து முதல் குற்றம் என்று லேசாக விட்டார்.

அடுத்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்னமிடும்படி மனைவியிடம் சொல்ல, அன்னம் இருக்கும்போதும் வேண்டுமென்று இல்லை என்று பொய் சொன்னதால் மனைவியிடம் இரண்டாவது குற்றம் ஏற்பட்டது.

பெரியநம்பி இவருடைய குரு. குருபத்தினியிடம் இவர் மனைவிக்கு கிணற்றில் நீர் இறைக்

கும்போது ஏற்பட்ட சண்டையினால் குரு இவர் வீட்டில் தங்காமல் வேறு இடத்திற்கு சொல்லிக் கொள்ளாமல் போகக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆக இந்த மூன்று காரணங்களைக் கொண்டு இனி தன் மனைவியுடன் வாழ முடியாது துறவறம் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று மனைவியை பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டு துறவறம் பூண்டார். ஆஸ்ரம ஸ்வீகாரம் செய்ததால் இவருக்குக் காஞ்சி தேவப்பெருமாளால் ராமானுசமுனி அல்லது லக்ஷ்மண முனி என்றும் யதிராஜர் என்றும் நாமம் சூட்டப்பட்டது.

### உடையவர்

பெரிய நம்பி இவரை தர்சன ப்ரவர்த்தகராக்க நினைத்தார். அதனால் திருவரங்கப் பெருமாள் அரையரை காஞ்சிபுரம் சென்று தேவபெருமாளிடம் ராமானுஜரைத் தரும்படி கேட்டுவருமாறு அனுப்பினார். அரையர் தனது இனிய இசையால் தேவ பெருமாளிடம் விண்ணப்பித்தார். இவரது இசையில் மகிழ்ந்த வரதராஜர் ''நீர் வேண்டுவதை தருகிறேன். உமது இசை என்னை மிகவும் ஆட்கொண்டுவிட்டது'' என்றார். ''அப்படியானால் நீர் ''ராமானுஜனை பெரிய பெருமானுக்காக தந்தருள வேண்டும்'' என்று சொன்னானர். ஒரு நிமிடம் ஸ்தம்பித்து பதில் சொல்லாமல் இருந்த வரதரை ''சொன்ன சொல் தவறலாமோ'' என்று அரையர் கேட்க, ''சரி, உன் வஞ்சனையில் அகப்பட்டு வரம் தந்து விட்டேன், இனி என்ன செய்வது? ராமானுஜனை அழைத்துச் செல்லும்'' என்று வரதராஜர் அனுமதி அளிக்க ஸ்ரீரங்கத்திற்கு ராமானுஜரை அழைத்து வந்தார் அரையர். அவரை எதிர் கொள்ள வந்த பெரியநம்பிகளுடன் வந்து, பெரியபெருமாள், தாயாரை சேவித்தபின், பெரிய பெருமாள் சோதி வாய்திறந்து ''பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்'' என்கிற உபய விபூதி ஐஸ்வர்யத்தை (அதாவது லீலா விபூதி, நித்யவிபூதி) உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். நம்முடைய வீட்டை அதாவது கோயிலைத் திருத்தி பணி கொள்ளும்'' என்றார். உபய விபூதியை தம் கையில் உடையவர் என்ற அர்த்தத்தல் ஸ்ரீரங்கனாதன் அவருக்கு உடையவர் என்கிற திருநாமத்தைச் சாற்றினார்.

### ஸ்ரீ பாஷ்யகாரர்

வடநாட்டிற்கு சென்று அங்குள்ள குத்ருஷ்டிகளை ஜயித்து பின் சரஸ்வதி பண்டாரத்திற்கு வரும்போது சரஸ்வதி அவரிடம் ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ'' என்கிற சுருதிக்கு பொருள் சொல்லக் கேட்டார். சூரிய கிரணங்களால் விகாசிக்கப்பட்ட தாமரைப் பூபோலிருக்கும் பரம புருஷனின் திருக்கண்கள் என்று விளக்கம் அளித்தவுடன் சரஸ்வதி மிகவும் சந்தோஷித்து இவர் அருளின ஸ்ரீ பாஷ்யம் க்ரந்தத்தை தன் தலைமேல் வைத்துக் கொண்டாடி இவரை ஸ்ரீபாஷ்யகாரர் என்று திருநாமம் சாத்தினார்.

### சடகோபன் பொன்னடி

இராமானுஜரின் ஐந்து ஆசார்யர்களில் ஒருவரான திருமலை ஆண்டான் என்பவரிடம் திருவாய் மொழியைக் கற்றுக் கொண்டார் ராமானுஜர். அந்த திருமலை ஆண்டான் ராமானுஜருக்குசடகோபன் பொன்னடி என்கிற விருதைச் சாற்றினார்.

### கோயிலண்ணன்

ஆண்டாள் அரங்கனாதனை மணந்து கொள்வதற்கு உதவினால், நூறுதடா வெண்ணெய், அக்கார அடிசில் படைப்பதாக திருமாலிருஞ்சோலை அழகருக்கு வேண்டுதல் செய்திருந்தாள். இதை அறிந்த ராமானுஜர் இந்த படைப்பைச் செய்து ஆண்டாளின் மனோரதத்தை பூர்த்தி செய்தார். ஸ்ரீவில்லிப்புத்தூர் சென்ற ராமானுஜரை ஆண்டாள் ஓர் அடி முன்னே வந்து கோயில் அண்ணா என்று விளித்ததாக கூறுவர். ஓர் அண்ணன் தங்கைக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசையாக நினைத்து ஆண்டாள் அவதரித்த பல வருடங்கள் கழித்து பிறந்த ராமானுஜர் தம்பி என்கிற ஸ்தானத்தில் நிறைவேற்றினாலும், இதை அண்ணன் செய்யும் காரியமாக நினைத்து ''அண்ணா'' என்று அழைக்கப்படும் பாக்யம் பெற்றவர் நம் ராமானுஜர்.


### பூத புரீசர்

ஸ்ரீ பெரும்புதூர் ஆதிகேசவப் பெருமாள் இந்த திருநாமத்தை சாற்றினார்.

### தேசிகேந்த்ரர்

இதை திருவேங்கடமுடையான் ராமானுஜருக்குச்சாற்றினார்

திருப்பதி திருவேங்கடமுடையானின் வக்ஷஸ் தலத்திலே இருக்கும் ஸ்ரீதேவியை வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் திருமஞ்சனம் முடிவு பெற்ற பின் கனகமய கண்டியை எழுந்தருளப்பண்ணுவார்கள். ''அகலகில்லேன்'' என்கிற பாசுரத்திற்கேற்ப ஒரு நிமிடம் கூட பகவான் மார்பை விட்டுப் பிரியாமல் இருப்பதற்காகவும் அந்த சிறிது நேர பிரிவுத் துன்பத்தையும் அகற்றும் உபாயமாக பூமிதேவி



யின் அம்சமான ஸ்ரீவில்லிப்புத்தூரில் அவதரித்த ஆண்டாளின் 143 பாசுரங்கள் கொண்ட நாச்சியார் திருமொழியை அநுசந்தானம் செய்ய வேண்டும் என்று உடையவர் நியமித்திருக்கிறார். இன்றைக்கும் இவ்வாறு நடைபெற்று வருகிறது. சிவ க்ஷேத்ரம் என்று சொல்லிக் கொண்டு இருந்தவர்களை பெரிய சபையில் வாதயுத்தம் நடத்தி எம்பெருமானார் ப்ரமாணத்துடன் கண்டித்து விஷ்ணு க்ஷேத்ரம் தான் என்று அறுதியிட்டதன் விளைவாக பெருமாள் சங்கு சக்ரதாரியுடன் காட்சி அளித்து திருவேங்கட முடையானாக அருங்காட்சி அளித்தார். பின்னர் எல்லாரும் ஒப்புக் கொண்டனர். இதனால் தேசிகேந்திரர் என்ற நாமம் இராமானுஜருக்கு உண்டானது.

**க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யர்**

திருக்கோட்டியூர் நம்பியைப் போல நடையாய் நடக்க வைக்காமல், சிஷ்யர்களுக்கு அதிப்ரியத்துடன் உபதேசம் பண்ணிய ராமானுஜர் நமது ஆசாரியனாக கிடைத்ததற்கு நாம் மிகவும் பெருமைப் படவேண்டும். 74 சிம்மாஸனாதிபர்களை உருவாக்கிய அவரைப்பற்றி சொல்லிக் கொண்டேபோனால் எழுத இடம் போதாது. யதிகளுக்கு ராஜா, ஸார்வபௌமர், பதி என்கிற பட்டப் பெயர்கள் இவர் ஒருவருக்கே பொருந்தும்.

இவர் நவநிதிகளாக நவரத்னங்கள் போல ஜ்வலிக்கும் ஒன்பது க்ரந்தங்களை அருளியிருக்கிறார். அவையாவன, ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸ்ரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம் என்பவை.

அவர் காட்டிய வழியைப் பின்பற்றி உய்வோமாக.

***

# கண்ணனை நான் கண்டுகொண்டேன்

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்

காணக் கோடிக் கண்கள் வேண்டும் கண்ணா!
கண்டு கொண்டேன் விஸ்வ ரூபம் கண்ணா!
ஞானக் கண்கள் நீயும் தந்தாய் கண்ணா!
நானும் அதனால் கண்டு கொண்டேன் கண்ணா! 1

புல்லாங் குழலி சையின் புகலிடமே கண்ணா!
புல்லரிக்கப் பொங்கி வரும் புத்துணர்ச்சி கண்ணா!
இல்லாமல் இருப்பவன்நீ என்று சொல்லும் கண்ணா!
இல்லம்உன் என்இதயம் என்ப துண்மை கண்ணா! 2

காலம் தூரம் கடந்து நிற்கும் கண்ணா!
காலம் வென்ற கீதை தந்தாய் கண்ணா!
மூலம் கீதை, முடிவும் கீதை கண்ணா!
மூண்ட போரில் முளைத்த கீதை கண்ணா! 3

கீதை சொல்லும் மந்திரத்தைக் கேட்கவேண்டும் கண்ணா!
கேட்டு நாளும் பாடிப்பாடித் துதிக்கவேண்டும் கண்ணா!
பாதைநல்ல பாதை காட்டும் பகலவன்நீ கண்ணா!
படர்ந்த ஒளியில் என்னைநீயும், படியவைத்தாய் கண்ணா! 4

கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் கண்ணா!
கற்றுத் தேர்ந்து, கடைப்பிடிக்க கரங்கொடுப்பாய் கண்ணா!
சர்வ முத்தி தந்திடநீ சரணடைந்தேன் கண்ணா!
சர்வலோக சாந்தி நிலவ சஞ்சீவிநீ கண்ணா! 5

காலம்வென்று, ஞானம் கண்ட உண்மைகளைக் கண்ணா!
கணிதம்வென்ற விஞ்ஞானம் இன்றும் காணவில்லை கண்ணா!
காலம்வெல்லும் ஞானம், விஞ்ஞானம் ஒன்றாய் கண்ணா!
காசினியில் காணும் காலம் கனிவதென்றோ கண்ணா! 6

தியானம் நாளும் செய்யும் முறைகள் கண்ணா!
தேர்ந்து கொண்டு தெளிந்தால் மனதில் கண்ணா!
தியான சக்தி, உயிரின்சக்தி தேடிவரும் கண்ணா!
தெளிந்து கொண்டோர் உன்னடியில் சேர்ந்திடுவார் கண்ணா ! 7

உன்னடியில் பூரணமாய்ச் சரண டைந்தேன் கண்ணா!
உன்னையன்றி வேறொன்றும் உலகில் இல்லை கண்ணா!
இன்பமென்றும், துன்பமென்றும், எதுவும் இல்லை கண்ணா!
எல்லாம் ஒன்றாய் இருப்பவன்நீ என்பதுண்மை கண்ணா! 8

'நான்,'' 'எனது'', என்பதின்றி நாடி வந்தேன் கண்ணா!
நாடும் 'பற்று'' ஒழித்துவிட்டு நாடி வந்தேன் கண்ணா!
'தான்'' என்ற தற்பெருமை தகர்த்து வந்தேன் கண்ணா!
தஞ்சம்என வந்தடைந்தேன் தடுத்து அருள்வாய் கண்ணா! 9

இரவென்றும், பகலென்றும், எதுவும் இல்லை கண்ணா!
எல்லாம் உன் பேரொளியின் இடம் மாற்றம் கண்ணா!
கரம்குவித்து, சிரம் தாழ்த்திச் சரணடைந்தேன் கண்ணா!
கண்முன்னே நீவந்தாய் கண்டு கொண்டேன் கண்ணா! 10

***

# எது சரியான விடை?

- தொகுத்தவர் அ. நிறைமதி

1. சிவபெருமான் காலனைக் காலால் உதைத்த திருத்தலம் இவற்றில் எது?

அ) திருவதிகை (ஆ) திருவழுவூர்

இ) திருக்கடவூர் (ஈ) திருப்பறியலூர்

2. ஐம்பெரும் பூதத்தலங்களில் மண்ணுக்கு உரிய திருத்தலம் இவற்றில் எது?

அ) திருவானைக்கா (ஆ) திருக்காளத்தி

இ) சிதம்பரம் (ஈ) திருவாரூர் மற்றும் காஞ்சிபுரம்

3. கோபுரத்தைக் காட்டிலும் உயர்ந்த விமானத்தை உடைய கோயில்கள் இவற்றில் எவை?

அ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

ஆ) இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்

இ) தஞ்சை அருள்மிகு பிரகதீசுவரர் திருக்கோயில்

ஈ) கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள கங்கை கொண்ட சோழீச்சரம்.

4. ஆறுமாதம் வெண்மையாகவும், ஆறு மாதம் கறுப்பாகவும் காட்சியளிக்கும் நிறம் மாறும் விநாயகர் உள்ள திருத்தலம் இவற்றில் எது?

அ) இவர் குடந்தைத் திருவலஞ்சுழி விநாயகர்

ஆ) இவர் மதுரை மீனாட்சிக்கோயில் விநாயகர்

இ) இவர் கொல்லூர் மூகாம்பிகைக் கோயில் விநாயகர்

ஈ) இவர் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் அருகில் உள்ள கேரளபுரத்தில் உள்ள சந்திரக் காந்தக் கல்லால் ஆன விநாயகர்.

5. உமை ஆண்வேடத்திலும், சிவபெருமான் பெண் வேடத்திலும் திருவீதி உலா வரும் திருத்தலம் இவற்றில் எது?

அ) திருச்செங்கோடு (ஆ) திருநணா

இ) திருநெல்வேலி (ஈ) திருவானைக்கா

6. நந்தனாருக்காக நந்தி விலகியிருப்பது போல் திருஞானசம்பந்தர் தரிசனம் பெற நந்தி விலகியிருக்கும் திருத்தலங்கள் இவற்றில் எவை?

அ) திருவைகாவூர் (ஆ) திருவாடுதுறை

இ) திருப்பூந்துருத்தி (ஈ) திருப்பட்டீசுவரம்

7. ஆறுபடை வீடுகளில் சூரசம்ஹாரம் நடைபெறாத திருத்தலம் எது?

அ) திருஆவினன்குடி (ஆ) திருவரங்கம்

இ) திருத்தணிகை (ஈ) பழமுதிர்சோலை

8. நெற்றிக்கண்ணுடன் காட்சியளிக்கும் திருமாலை எங்கு தரிசிக்கலாம்?

அ) திருவில்லிப்புத்தூர்

ஆ) திருமாலிருஞ்சோலை

இ) திருக்கோட்டியூர் (ஈ) திருவயிந்திரபுரம்

9. பெருமாள் வெள்ளை சாத்திக் கொண்டு (விபூதி அணிந்துகொண்டு) திருவீதி வலம் வரும் திருத்தலம் இவற்றில் எது?

அ) திருவெள்ளறை (ஆ) திருப்புட்குழி

இ) திருஊரகம் (ஈ) திருக்கண்ணங்குடி

10. இந்திய துணைக்கண்டத்தில் நவகிரகங்களுக்குத் தனிக்கோயில்கள் உள்ள ஒரே திருத்தலம் இவற்றில் எது?

அ) தென்காசி (ஆ) திருவக்கரை

இ) திருநாகேசுவரம் (ஈ) சூரியனார்கோயில்

11. தமிழ்நாட்டிலேயே பெரிய தேர் கொண்டு விளங்கும் திருத்தலம்

அ) தாரமங்கலம் (ஆ) பேரூர்

இ) மதுரை (ஈ) திருவாரூர்



## தேர் அமைக்க ரூபாய் 25 லட்சம்

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருள்மிகு கைலாச நாதர் திருக்கோயில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அழகிய சிற்ப வேலைப் பாடுகள் மிக்க திருத்தேர் அண்மையில் சமூக விரோதிகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டது.

''தீக்கிரையாக்கப்பட்ட இந்தத் தேரினை முற்றிலும் புதியதாக உருவாக்கி அமைக்க ''திருக்கோவில் திருப் பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து'' ரூபாய் 25 லட்சம் வழங்கப்படும்'' என நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித் துள்ளார்கள்.

*12. ''அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்'' என்று பாடியவர் இவர்களில் யார்?*

அ) சுந்தரர் (ஆ) திருநாவுக்கரசர்

இ) காரைக்கால் அம்மையார்

(ஈ) அருட்பிரகாச வள்ளலார்

*13. ''நல்லார் அறஞ் சொல்லப் பொல்லார் புறம்கூற.'' என்று பாடியவர் இவர்களில் யார்?*

அ) கணியன் பூங்குன்றனார் (ஆ) நக்கிரர்

இ) காக்கை பாடினியார் (ஈ) திருஞானசம்பந்தர்

*14. ''நின்பணி பிழைக்கிற் புளியம் விளாரால் மோதுவிப்பாய்'' என்று பாடியவர் இவர்களில் யார்?*

அ) திருநாவுக்கரசர் (ஆ) பட்டினத்தடிகள்

இ) தாயுமான சுவாமிகள் (ஈ) பாரதியார்

*15. ''அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்து அரவணைப் பள்ளியானே'' என்று சொல்லி வைத்தவர் இவர்களில் யார்?*


அ) ஆண்டாள் (ஆ) குலசேகராழ்வார்

இ) பெரியாழ்வார் (ஈ) திருப்பாணாழ்வார்.

### சரியான விடைகள்


1. இ. திருக்கடவூர்
2. ஈ. திருவாரூர் மற்றும் காஞ்சிபுரம்
3. இ. தஞ்சை அருள்மிகு பிரகதீசுவரர் திருக்கோயில்
   ஈ. கங்கை கொண்ட சோழீச்சரம்
4. ஈ. கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் அருகில் உள்ள கேரளபுர விநாயகர்
5. இ. திருவானைக்கா
6. இ. திருப்பூந்துருத்தி
   ஈ. திருப்பட்டீச்சரம்
7. இ. திருத்தணிகை
8. ஈ. திருவயிந்திரபுரம்
9. ஈ. திருக்கண்ணங்குடி
10. ஈ. சூரியனார் கோயில்
11. ஈ. திருவாரூர்
12. ஈ. அருட்பிரகாச வள்ளலார்
13. ஈ. திருஞானசம்பந்தர்
14. அ. திருநாவுக்கரசர்
15. இ. பெரியாழ்வார்.

***





திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞான சம்பந்தர் இசைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் உதவி ஆணையாளர் திரு பி. வாசுநாதன், எம்.ஏ.பி.எல்., திருக்கோயில் இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், செயல் அலுவலர் திரு மறைமலை ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு வருகை புரிந்தார்கள். சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகையா, பிஎஸ்சி.பிஎல்., இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால், எம்.ஏ.பிஎல். ஆகியோர் உடன் உள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.